# சோதிடமலர்

# SOTHIDA MALAR




உள்ளே..........

- ★ வியாழ மாற்றம் நற்பலன் அளிக்குமா?
- ★ ஜோதிஷ பலன் ஏன் தவறுகிறது
- ★ அதிஷ்ட எண் ஞானம்
- ★ சோதிடம் கற்போம்
- ★ வானியற் காட்சிகள்
- ★ குறுக்கெழுத்துப் போட்டி

இன்னும் பல.

* * *

குரோதன ௵ தை ௴

(14-1-86—12-2-86)

விலை ரூபா: 3-00



## மாவைக் கந்தன் இலட்சார்ச்சனைச் சிறப்பிதழ்

உ

மாவையாதீனம்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்



# இலட்சார்ச்சனைச் சிறப்பு மலர்

# மாவைக் கந்தன் ஆலய வரலாறு

கலிங்கராஜனின் மகளான மாருதப்புரவல்லி (அங்கசுந்தரி) என்பவள் எதிர் பாராதவிதமாக தனக்கு ஏற்பட்ட முனிசாபத்தினுல் குன்மரோகமும் குதிரைமுகமும் பெற்றபோது கஷ்டமும் கவலையுமடைந்தவளாய் முனிவரின் சாபவிமோசனத்தின் பிரகாரம் புண்ணிய ஸ்தலங்களிலும், புண்யதீர்த்த க்ஷேத்திரங்களிலும் யாத்திரை செய்து வருங்கால் சாந்த முனிவரின் அருள்சிறந்த ஆசியின் பேருக இலங்கையின் வடபாலுள்ள நகுலேஸ்வரத்தை அடைந்தார். அங்கு வடகடல் துறையில் கீரிமலை எனும் புண்ணிய ஸ்தலத்தில், முனிவர்களுடன் இருந்து தவமியற்றிக் கொண்டிருந்த நகுலமுனிவரின் ஆசியும் அருளும் கிடைக்கப்பெற்றவளாய், இங்குள்ள சமுத்திரத்துடன் சங்கமமாகும் நன்னீர் தீர்த்தத்தில் தினமும் தீர்த்தமாடி அங்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் காங்கேயப்(கந்தப்) பெருமானை அன்புடன் வழிபட்டுவரு நாளில், விகாரமாகிய தனது முகமும் குன்மரோகமும் மாறி மாறி வருவதையும் தான் ஓர் அழகிய பெண்ணுவதையும் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்து இன்பமான இச்செய்தியை தனது பெற்ருேருக்குமறிவித்து இவ்விடத்திலேயே தங்கியிருந்து காங்கேயப் பெருமானை வழிபட்டு வரும்போது பெருமானுக்கு எவ்வகையிலும் சிறந்த ஓர் ஆலயம் அமைக்கவேண்டுமென்னும் எண்ணம் தோன்றிற்று. தந்தையாராகிய மதுரை மன்னன் திசையுக்கிரப் பெருவழுதியின் விருப்பப்படி அங்குள்ள சிற்பக் கலைஞரின் கைவண்ணத்தால் கோவில் நிர்மாண வேலைகள் யாவும் இனிதே துரிதமாக நிறைவேறின. குதிரைமுகம் மாறப்பெற்றதனுல் முன்பு கோவிற் கடவை என்றழைக்கப்பட்ட இத்திருத்தலம் (மா - குதிரை, விட்ட — நீங்கிய, புரம் — தலம்) மாவிட்டபுரம் என அழைக்கப்படலாயிற்று.

காவிரிப்பூம் பட்டணத்திலிருந்து அழகான விக்கிரகங்களும் மற்றும் வேண்டிய உபகரணங்களும் மரக்கலங்கள் மூலம் கொண்டுவரப்பெற்று, அப்போது பட்டத்தரசியாகவுமிருந்த மாருதப்புரவல்லியின் விருப்பப்படி ஆனிமாத உத்தர நக்ஷத்திரத்தில் இந்தியாவிலிருந்து வருகைதந்த தீக்ஷிதப் பெருமக்களால் காங்கேயப் (முருகப்) பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது. காங்கேயப் பெருமான் விக்கிரகமாக வந்திறங்கிய துறையாதலால் காங்கேசன் துறை என்னும் நாமமும் அவ்விடத்திற்குண்டாகி வடபகுதிக்கு இப்போதும் முக்கிய துறைமுகமாக விளங்குகின்றது.

இவ்வாறு, இலங்கையின் மிகப்பழமையானதும், தமிழரச பரம்பரையைத் தோற்றுவித்ததும், தமிழ் குடியேற்றங்களை உருவாக்கக் காரணமானதுமாகிய மாவைக் கந்தசுவாமி கோவில் 15-ம் நூற்றுண்டுவரை குறையெதுவுமின்றி வளர்ச்சியடைந்து, பின் அன்னியர் ஆதிக்கத்தினுல் சிலகாலம் தாழ்வடைந்து அதன் பின் 17-ம் நூற்றுண்டளவில் புத்துயிர்பெற்று சிறப்படைந்து வந்தது. அன்று தொடக்கம் இக்கோவிலில் கொடியேற்றத் திருவிழா இருபத்தைந்து நாள் வரை நடைபெற்று ஆடி அமாவாசைத் தினத்தன்று கீரிமலைக் கடலில் தீர்த்தமாடுவதும், மாசி மகம், மகா சிவராத்திரி தினம் ஆகிய காலங்களிலும் திருமஞ்சனமாடுவதும் வழமையாகி வருகின்றன.

ஆகம மரபு பிறழாது கோவில் கிரியைகள் நடைபெறுவதும், கலைஞர்களைக் கௌரவித்து பட்டங்கள் அளிக்கும் வழக்கமும் இம்மாவை ஆதீனத்திற்கு பெருமையும் முதன்மையளிப்பதுமாகும். மஹோற்சவ காலங்களில் கதாப்பிரசங்கங்கள் செய்வித்தல், இலட்ச தீபமேற்றுதல் முதலியன இன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் ஈழத்தின் ஆலயத்தில் முதன் முதல் இராஜகோபுரம் அமைத்த பெருமையும் இவ்வாதீனத்திற்கே உரியதாகும்.

தீக்ஷிதர்பரம்பரையில் தோன்றிய தீக்ஷிதர் ஸ்ரீ சபாபதிஐயர் அவர்களின் ஏழாவது வாரிசர்கத் திகழும், இன்றைய ஆதீனகர்த்தராக விளங்கும் மஹாராஜஸ்ரீ சு. ஷண்முகநாதக்குருக்கள் அவர்கள் நித்ய நைமித்யங்களை பக்தர்களின் அருட்செல்வத்தை பிரதிபலிக்கும்வண்ணம் குறைவற நிறைவேற்றி வருகின்றார்கள். இவரின் தமிழ், ஆங்கில, சமஸ்கிருத ஆற்றல் இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக இருக்கின்றன. இவரின் மேற்பார்வையில், ஆலயத்தில் நடைபெறும், ஆனி, ஆடி மாத உற்சவங்கள் ஸ்கந்தசஷ்டி விழாவும், தைமாத இலட்சார்ச்சனையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

<u>மகரமாத லட்சார்ச்சனை 1986:</u> இத்யாதி விசேஷத் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டு மந்தாகினி தந்த வரோதயன் என்றும், காங்கேயன் என்றும், அடிபோற்றி அல்லிமுடி சூட்டவல்ல அடியார்க்கு நல்ல பெருமாளாக, மாவையம்பதியிலே எழுந்தருளியிருக்கும் ஷண்முகப் பெருமானின் குரோதன வருட மகரமாத இலட்சார்ச்சனைகள் பத்துத் தினங்கள் நடைபெறும். இத்தினங்களில் நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து உபயம் செய்வோரும், தரிசனை செய்ய வருவோரும் எதுவித கஷ்டங்களின்றி பிரார்த்தித்துப் போகவேண்டிய சகல வசதிகளையும் மாவை ஆதீனம் செய்திருக்கிறது.

இம்முறை இடம்பெறும் இலட்சார்ச்சனையில் ஒவ்வொரு தினமும் ''இந்நாட்டில் அமைதியும், சமாதானமும், சாந்தமும் நிலவி, மக்கள் அனைவரும் எதுவித கஷ்டங்களின்றி தத்த இஷ்டசித்திகளுடன் வாழ அனுக்கிரகம் செய்யவேண்டும்'' என்ற பிரார்த்தனை முக்கிய இடம் பெறுகிறது. ஆயிரத்திமுன்னூறு வருஷங்களுக்கு முன்பிருந்தே மாவையம்பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் மாவை முருகப்பெருமான் சன்னிதியில் மக்கள் யாபேரும் இவ்வழகிய ஆறுமுகப் பரஞ்சுடரைப் பார்த்து அவன் புகழ் கேட்டு அவன் திருநாமம் ஓதி மனமுருகி தமது இடர்களை நீக்கித் தருமாறு பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

இலட்சார்ச்சனை பத்துத் தினங்களிலும் காலையில் திருப்புகழ் அஞ்சலியோடும். மாலையில் ஈழநாட்டுச் சிறந்த நாதஸ்வர மேதைகளின் நாதஸ்வராஞ்சலியோடும் நாட்டின் பல பாகங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட சிவாச்சாரியர்களது மந்திரபூர்வமான கிரியைகளுடன் இலட்சார்ச்சனை நடைபெறும். தைப்பூசத்தன்று மாலை ''ஸ்ரீ விசால மஞ்சம்''மீதில் ஷண்முகப் பெருமான் வீதிவலம் வரும் பவனி மகோன்னதாகும்.

சிரமங்களும், தொல்லைகளும் அதிகரித்திருக்கும் இந்நாட்களில் 'கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்' — 'வேண்டிய வரங்கொடுப்போன் — மெய்கண்ட இத்தெய்வம் 'இத்தெய்வமல்லாமல் புவியில் வேறில்லை' எனக் குமரகுருபர சுவாமிகள் கூறியது போல நாமனைவரும் மாவை முருகப் பெருமான் சன்னிதானம் சென்று எமது குறைகளைக் கூறி அருள் பெறுவோமாக.

# குரோதன ௵ தை மாத இலட்சார்ச்சனை

நிகழும் குரோதன ௵ தை ௴ ௪ ஆம் நாள் (17-1-86) வெள்ளிக்கிழமை மேற்படி கோவிலில் ஷண்முகப்பெருமானுக்கு இலட்சார்ச்சனை ஆரம்பமாகும். தை ௴ ௧௩ ஆம் நாள் (26-1-86) ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத்தன்று பகல் நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும், அதனையடுத்து மஞ்சஊர்தி பவனியுடன் இலட்சார்ச்சனை பூர்த்தியடையும். இலட்சார்ச்சனை நிகழ்ச்சிகள் அனைத்தும் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பித்துக் குறிப்பிட்ட நேரத்திற் பூர்த்தியடையும் என்பது கவனிக்கத்தக்கது.

அடியார்கள் அனைவரும் தத்தமது தகுதிக்கு ஏற்ப அபிஷேகப் பொருட்களான பால், தயிர், நெய், தேன், இளநீர், பழவகைகள், கர்ப்பூரம் ஆகியவற்றைத் தெய்வீக சிந்தனையோடு வழங்கி எம்பெருமான் திருவருளுக்கு ஆளாகுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

இலட்சார்ச்சனையின் பொருட்டு வழங்கப்படும் சகல பொருட்களையும், நிதியையும் தயவுகூர்ந்து களஞ்சிய வாசலில் ஒப்படைத்து அதற்கான பதிவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு விண்ணப்பிக்கின்றோம்.

தைப்பூசத்தன்று பகல் 12 மணியளவில் விசேஷமாக இடம்பெறும் ஷண்முகார்ச்சனையில் 108 பக்தர்கள் பங்குபற்றும் வசதிகள் உண்டு. இதில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் களஞ்சிய வாசலில் விபரங்களை அறியலாம். தமது பெயர், நட்சத்திரங்களையும் அங்கேயே பதிவுசெய்யவும் வேண்டும். முன்னதாகவே பதிவு செய்து கொண்டவர்களுக்கு மட்டுமே இந்தச் சங்கற்ப அர்ச்சனை நிகழ்த்த வசதியாகும். 10-1-86 ஆம் திகதியிலிருந்து இப்பதிவுகளைச் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்த அர்ச்சனையில் பங்குபற்ற விரும்புபவர் ரூபா ஐம்பது (50/-) செலுத்துதல் வேண்டும்.

## இலட்சார்ச்சனை நிகழ்ச்சிகளின் ஒழுங்குகள்

**காலை**

முு. ப. 7-00 மணி: வேதபாராயணம், நாதஸ்வராஞ்சலி, ஸ்நபனாபிஷேகம்
" 8-00 மணி: காலைச்சந்தி பூசைகள்
" 8-30 மணி: இலட்சார்ச்சனை ஆரம்பம்
" 10-30 மணி: அருட்பிரசாதங்கள் வழங்கல்.

**மாலை**

பி. ப. 3-00 மணி: நாதஸ்வராஞ்சலி, ஸ்நபனாபிஷேகம்
மாலை 3-45 மணி: சாயங்காலப் பூசைகள்
மாலை 4-15 மணி: இலட்சார்ச்சனை ஆரம்பம்
இரவு 6-15 மணி: அருட்பிரசாதங்கள் வழங்கல்

நாதஸ்வராஞ்சலியும், முருகநாம பஜனைகளும், திருப்புகழ் அஞ்சலிகளும் இலட்சார்ச்சனை நடைபெறும்போது இடம் பெறும்.

குறிப்பு: 1. தைப்பூசத்தினத்தன்று நடைபெறும் நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் சரியாகக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்; பகல் 10 மணியளவில் பூர்த்தியடையும்.

2. தைப்பூசத்தன்று பகல் 12 மணிக்குப் பின் 108 பக்தர்கள் சங்கற்பிக்கும் ஷண்முகார்ச்சனை ஆரம்பமாகும்.

3. தைப்பூச மஞ்சப் பவனி பிற்பகல் 6 மணிக்கு ஆரம்பமாகும்.

சோதிடமலர்
SOTHIDA MALAR

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

குரோதன ஹு தை மீ
( 14 - 1 - 86 )

மலர் 8 | இதழ் 10

## சூர்யஸ்துதி

ஜயாய ஜயபத்ராய ஹர்யஸ்வாய நமோநம :
நமோ நம : ஸஹஸ்ராம்சோ ஆதித்யாய நமோநம: ||

★ ★ ★

ஜயதி ஜயதி சூர்யோ சப்தலோகைகதீப
கிரண சகித பாத ! ஸர்வதுக்கஸ்ய ஹர்தா
அருண கிரண கம்ப : ஆதிராதித்ய மூர்த்தி
பரம பரம திவ்ய : பாஸ்கரம் தம் நமாமி ||

★ ★ ★

குமாரேச சூனோ குஹ ஸ்கந்தசேனு
பதே சக்திபாணே மயூராதி ரூட !
புளிந்தாத்மஜா காந்த பக்தார்த்தி ஹாரின்
ப்ரபோ தாரகாரே சதா ரக்ஷ மாம் தவம் ||

★ ★ ★

பொங்கும் பொங்கல் பொலிவுடன் பொங்குக!
தங்கும் மங்களம் தரணியில் தளிர்க்கவே
எங்கும் என்றும் எம்மாவைக் கந்தனின்
மங்கள வருளும் மலர்ந்து சிறக்கவே!

|| வழுத்துகிறோம்! வாழ்த்துகிறோம் ||

## தை மாசப் பண்டிகைகள்

"தை பிறந்தால் வழிபிறக்கும்" என்னும் நம்பிக்கையுடன் நாளும் நல்லனவே செய்யும் நல்லோர்களும், நலிவடைந்தோரும் எதிர்பார்ப்பது 'பொங்கலோ பொங்கல்' 'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக' என சிறப்புறும் சீர்ப் பொங்கலையே, உத்தராயண ஆரம்பகாலமாகிய தை முதலாந்திகதி சூரிய பகவானுக்கு பொங்கல் படைத்து பூஜனை புரிந்து பிரார்த்தனை செய்வது இப்பண்டிகையின் வழக்காகும். சூரியன் தைமுதல் ஆனிவரை வடக்கு நோக்கியும் ஆடி முதல் மார்கழி வரை தெற்குநோக்கியும் சஞ்சாரம் செய்யுங் காலத்தில் வடக்குநோக்கி சஞ்சாரம் செய்வது பகற்காலத்தையும், மற்றையது இராக்காலத்தையும் குறிக்கின்றது. இராக்கால முடிபாகிய மார்கழி மாதம் முழுதும் அதிகாலை வேளையாதலால் (இக்காலப்பகுப்பு தேவர்களுக்குரியதாகும்) அதிகாலை துயிலெழுந்து நீராடிய மக்கள் தேவர்களின் பகற்கால ஆரம்பத்தில் மகரராசியில் பிரவேசிக்கும் சூரியபகவானை வழிபடுவது போற்றுதற்குரியதாகும்.

## பட்டிப் பொங்கல்

தைப்பொங்கல் நாளின் மறுதினம் நடைபெறும் இப்பண்டிகை காளைகளுக்கும், பசுவினங்களுக்கு முரியதாகும். பசுவின் உடலில் முப்பத்து முக்கோடி தேவர்களும், கொம்பின் நுனியில் சகல தேவதைகளும், முகத்தில் சந்திரனும், பின்புறத்தில் கங்கைநதி தேவதைகளும், கால்களில் நான்கு வேதங்களும், வாலில் சர்வதீர்த்தங்களும் ரோமத்தில் முனிவர்களும் வசிப்பதாகவும் சத்தியம்சம் பொருந்தியதாகவும் சாஸ்திரங்கள் பசுக்களைப் போற்றிக் கூறுகின்றன. இவ்விதமான பசுவையும், அலகிலாமறை விளங்கும், அந்தணராகுதி விளங்கும், பாவலர் விளங்கும், மலர்குலாம் திருவிளங்கும், மழைவிளங்கும் மதுவிளங்கும், உலகெலாம் ஒளிவிளங்கும் தன்மைகளுக்கெலாம் காரணமான உழவருக்கு சிறப்பைக் கொடுக்கும் காளைகளையும் வீடுகளிலும், பட்டிகளிலும் நன்கு அலங்கரித்து சந்தனம் குங்குமம் அணிவித்து, மாட்டுத் தொழுவத்தில் பொங்கலிட்டு கோகுல பதியான மகாவிஷ்ணுவுக்கு படைத்து பசுக்களுக்கும் எருதுகளுக்கும் நிவேதித்து மிகுதியை நாமும் உண்டு மகிழ்வதே இப்பண்டிகையின் சிறப்பும் செல்வமுமாகும்.

# நாள் எப்படி?

தை 1 செவ் (14-1-86) சதுர்த்தி பகல் 11-24 வரை, சதயம் பகல் 2-52 வரை, மரணம், கரிநாள், தைப்பொங்கல். ராகு 3-34—5-04

தை 2 புத (15-1-86) பஞ்சமி-சித்தம் பகல் 11-39வ. பூரட்டாதி-மரணம் பகல் 3-49 வரை, கரிநாள் ஷஷ்டிவிரதம் மாட்டுப்பொங்கல்
ராகு 12-34—2-04

தை 3 வியா (16-1-86) ஷஷ்டி பகல் 12-45 வரை, உத்தரட்டாதி மாலே 5-34 வரை, சித்தம், கரிநாள், அவசிய கருமங்கள் செய்யலாம்.
ராகு 2-04—3-34

தை 4 வெள் (17-1-86) ஸப்தமி பகல் 2-35 வரை, ரேவதி மாலே 7-59 வரை, அமிர்தம், பகல் 2-35 வரை, சுபகருமங்கள் மேற்கொள்ளலாம்.
ராகு 11-05—12-35

தை 5 சனி (18-1-86) அஷ்டமி மாலே 4-59 வரை, அசுவினி-சித்தம் இரவு 10-53 வரை, அசுபதினம்.
ராகு 9-35—11-05

தை 6 ஞாயி (19-1-86) நவமி மாலே 7-40 வரை, பரணி-மரணம் பி.இ. 2-01 வரை,
ராகு 5-05—6-35

தை 7 திங் (20-1-86) தசமி இரவு 10-24 வரை, கார்த்திகை-மரணம் பி.இ. 5-08 வரை கார்த்திகை விரதம் அசுபதினம். ராகு 8-05—9-35

தை 8 செவ் (21-1-86) ஏகாதசி பி.இ. 12-55 வரை, ரோகிணி முழுவதும் அமிர்தம், ஸர்வஏகாதசி விரதம். வயல், தோட்டச் செய்கைகளுக்கு உகந்த நாள். ராகு 3-35—5-05

தை 9 புத (22-1-86) துவாதசி பி.இ. 3-00 வரை, ரோகிணி காலே 7-58 வரை, சித்தம், சுபகருமங்களுக்கு உகந்த தினம், ராகு 12-35—2-05

தை 10 வியா (23-1-86) திரயோதசி பி.இ. 4-34 வ. மிருகசீரிடம் பகல் 10-23 வரை, மரணம், பிரதோஷ விரதம். அசுபதினம். ராகு 2-06—3-36

தை 11 வெள் (24-1-86) சதுர்த்தசி பி.இ. 5-34வ. திருவாதிரை பகல் 12-17 வரை, சித்தம், கரிநாள் சுபகருமங்களுக்கு உகந்ததல்ல,
ராகு 11-06—12-36

தை 12 சனி (25-1-86) பூரணை பி.இ. 6-02 வரை, புனர்பூசம் பகல் 1-39 வரை, சித்தம், பூரணை விரதம், அவசிய கருமங்களை மேற்கொள்ளலாம்
ராகு 9-36—11-06

தை 13 ஞாயி (26-1-86) பிரதமை பி.இ. 5-59 வ. பூசம் பகல் 2-30 வரை, சித்தம், தைப்பூசம். சுபகருமங்களுக்கு உகந்ததினம் ராகு 5-06—6-36

தை 14 திங் (27-1-86) துவிதியை பி.இ. 5-32 வ. ஆயிலியம்-சித்தம் பகல் 2-53 வரை, அசுபதினம்
ராகு 8-06—9-36

தை 15 செவ் (28-1-86) திரிதியை பி.இ. 4-44 வ. மகம் பகல் 2-54 வரை, சித்தம். வயற்செய்கைக்கு ஏற்ற தினம். ராகு 3-36—5-06

தை 16 புத (29-1-86) சதுர்த்தி பி.இ. 3-40 வரை, பூரம் பகல் 2-38 வரை, அமிர்தம், அசுபதினம்.
ராகு 12-36—2-06

தை 17 வியா (30-1-86) பஞ்சமி பி.இ. 2-21 வரை, உத்தரம்-மரணம் பகல் 2-06 வரை, சுபதினமன்று
ராகு 2-06—3-36

தை 18 வெள் (31-1-86) ஷஷ்டி பி.இ. 12-50 வ. அத்தம் பகல் 1-20 வரை, அமிர்தசித்தம், நற்கருமங்களுக்கு உகந்த தினம்.
ராகு 11-06—12-36

தை 19 சனி (1-2-86) ஸப்தமி இரவு 11-07 வரை, சித்திரை-மரணம் பகல் 12-23 வரை, அசுபதினம்
ராகு 9-36—11-06

தை 20 ஞா (2-2-86) அஷ்டமி இரவு 9-12 வரை, சுவாதி-சித்தம் பகல் 11-15 வரை, சுபதினமல்ல.
ராகு 5-06—6-36

தை 21 திங் (3-2-86) நவமி மாலே 7-08 வரை, விசாகம்-மரணம் காலே 9-58 வரை, சுபகருமங்களை விலக்குக. ராகு 8-06—9-36

தை 22 செவ் (4-2-86) தசமி மாலே 4-56 வரை, அனுஷம்-சித்தம் காலே 8-22 வரை, வயற்செய்கைகளுக்கு உகந்த தினம். ராகு 3-36—5-06

தை 23 புத (5-2-86) ஏகாதசி பகல் 2-38 வரை, கேட்டை-சித்தம் காலே 6-58 வரை, மூலம்-மரணம் பி.இ. 5-16 வரை, சுபதினமன்று.
ராகு 12-36—2-06

தை 24 வியா (6-2-86) துவாதசி பகல் 12-19 வ. பூராடம் பி.இ. 3-42 வரை, சித்தம்; பிரதோஷ விரதம். அசுபதினம். ராகு 2-06—3-36

தை 25 வெள் (7-2-86) திரயோதசி பகல் 10-05வ. உத்தராடம்-சித்தம் பி.இ. 2-19 வரை, சுபகருமங்கட்கு உகந்த தினம். ராகு 11-05—12-35

தை 26 சனி (8-2-86) சதுர்த்தசி காலே 8-05 வரை, அமாவாசை பி.இ. 6-27 வரை, திருவோணம்

பி.இ. 1-16 வரை, சித்தம், அமாவாசைவிரதம். அசுபதினம் ராகு 9-35—11-05

தை 27 ஞாயி (9-2-86) பிரதமை பி.இ. 5-16 வ. அவிட்டம்-மரணம் பி.இ. 12-37 வரை, அசுப தினம். ராகு 5-05—6-35

தை 28 திங் (10-2-86) துவிதியை பி.இ. 6-43 வ. சதயம்-சித்தம் பி.இ 12-34 வரை, முக்கிய கரு மங்கள் செய்யலாம். ராகு 8-05—9-35

தை 29 செவ் (11-2-86) திரிதியை பி.இ. 4-52 வ. பூரட்டாதி-மரணம் பி.இ. 1-12 வரை, அசுப தினம். ராகு 3-35—5-05

தை 30 புத (12-2-86) சதுர்த்தி பி.இ. 5-46 வரை, உத்தரட்டாதி-சித்தம் பி.இ. 2-32 வரை, சதுர்த்தி விரதம் அசுபதினம். ராகு 12-35—2-05

# வா தைப் பாவாய்!

கோழிக் குரலோசை பொங்க
காளை மணியோசை ஓங்க
ஆழி அலையோசை தூங்க
தாழை மடல்போல வாதைப்பாவாய்!

வாழிய பண்பாடும் எங்கள்
மேழியர் அழைப்போடு திங்கள்
வாழை இலைபோடத் தங்கள்
வாழ் வோங்க வாதைப்பாவாய்!

பொங்கும் பால்பொங்க எங்கும்
பொங்கும் புகழ்பொங்க மங்களமே
தங்கும் எங்கும்தமிழ் மணமே
பொங்கட்டும் இடர்குன்ற வாதைப்பாவாய்!

மார்கழி பெற்ற பெண்ணாக
மாசிக்கு உற்ற தாயாக
ஊரார் போற்றும் தமிழணங்கே
பாரோர் மகிழவா தைப்பாவாய்!

கண்ணார் கரும்பும் மஞ்சள்
கதலி யொடுபூச் சரமும்
இன்னாள் உனக்கு நாம்படைக்க
கண்ணா் அமுதே வாதைப்பாவாய்!

கல்வயல், செல்வி கயல்விழி அருளம்பலம்
சாவகச்சேரி.

## போகிப் பண்டிகை

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" காலத்திற் கேற்பவே, மார்கழிப் பீடை என்னும் இயற்கைத் துன்பங்கள் நீங்குவதும், தை பிறந்தால் வழிபிறக்கும் என்பதும் மக்களின் நம்பிக்கையாகும். ஒவ்வொருவரும் தத்தம் இல்லங்களில் பழையனவற்றைக் களைந்து புதுப் பொங்கலுக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்து குழந்தைச் செல்வங்களுடன் பொங்கலுண்டு இன்புறுவதற்கு ஆயத்தமாவதே இப்பண்டிகை. பகற்காலமாகிய உத்தராயண ஆரம்பகாலம் பிரகாசமிருக்கவேண்டிய இன்பத்தை எதிர்நோக்குவதாலும், போகி என்னும் பெயருடைய இந்திரன் தனது கட்டளைப்படி மேகங்களை மழைபொழியச் செய்வதால் உலகுக்கு நன்மை உண்டாகும்படி அவனைக் குறித்துக் கொண்டாடும் தினமாக இருப்பதாலும், மார்கழி முழுதும் நோன்பிருந்து நலவுற்றவர்கள் தாம் விரும்பியவெல்லாம் பெற்று இன்பமனுபவிப்பவராதலாலும் போகிப் (போகம்-அனுபவிப்பது) பண்டிகை என்றும் பல காரணங்களுக்கு இப்பண்டிகை இலக்காகின்றது. எனவே மக்கள் யாபேரும் பழையன கழிந்து புதிய அலங்காரங்கள் செய்து ஆசாரத்துடனும் புனிதத்துடனும் விளங்கி மனக்கவலைகள், மற்றும் கஷ்டங்கள் எல்லாம் நீங்கி வாழ்க்கையில் புதிய உணர்ச்சி பிரகாசம் இன்பம் யாவற்றையும் எதிர்பார்க்கும் இப்புனித நன்னாளில் மகிழ்ச்சியுடன் கருமங்கள் ஆற்றி விரும்பிய பலன்களைப்பெற முயலவேண்டும்

*   *

## தைப்பூச நன்னாளில்

இறைவன் திருநடன சபையிலே சங்க, துந்துபி, வாத்ய ஒலியுடன் கீதவொலியும் சூழ சக்தியுடன் ஆனந்தத்தாண்டவஞ் செய்த காட்சியை தேவர்களும் மும்மூர்த்திகளும் கண்களால் கண்டு ஆனந்தத்தை சகல ஆன்மாக்களும் உய்வடையும் பொருட்டாக, அவர்களின் விருப்பத்திற்கிணங்க உமாதேவியாருடன் ஞானசபையிலே திருத்தாண்டவ தர்சனத்தைக் கொடுத்தருளினர். இச்சிறப்பைக் குறித்து தைமாதத்திற்கு விசேடமான இப்பூச நன்னாளில் இறைவனுடன் சக்திகலந்த காட்சியை காணுவதுடன், முருகன், குமரன், குகன் என்று பலவாறு போற்றி வணங்கப்படும் முருகப் பெருமானுக்கும் சிறப்பொடு பூசனைகளாற்றுவதும் இப்புண்ணிய நன்னாளுக்கு விசேஷமாகும்.

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### குரோதன ஸ்ரீ தை மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (14-1-86 முதல் 12-2-86 வரை)

| இங் | தமி | வாரம் | மகரம் | | கும்பம் | மீனம் | மேடம் | இடபம் | மிதுன | கடகம் | சிங்கம் | கன்னி | துலா | விருச்சி | தனுசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜன | தை | | ம.மி. முதல் | ம.மி. வரை (காலை) | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) |
| 14 | 1 | செவ் | 6 34 | 8 31 | 10 16 | 11 58 | 1 47 | 3 50 | 6 1 | 8 9 | 10 9 | 12 8 | 2 12 | 4 23 | 6 31 |
| 15 | 2 | புதன் | 6 31 | 8 27 | 10 12 | 11 54 | 1 43 | 3 46 | 5 57 | 8 5 | 10 5 | 12 4 | 2 8 | 4 19 | 6 27 |
| 16 | 3 | வியா | 6 27 | 8 23 | 10 8 | 11 50 | 1 39 | 3 42 | 5 53 | 8 1 | 10 1 | 12 0 | 2 4 | 4 15 | 6 23 |
| 17 | 4 | வெள் | 6 23 | 8 20 | 10 5 | 11 47 | 1 36 | 3 39 | 5 50 | 7 58 | 9 58 | 11 57 | 2 1 | 4 12 | 6 20 |
| 18 | 5 | சனி | 6 20 | 8 16 | 10 1 | 11 43 | 1 32 | 3 35 | 5 46 | 7 54 | 9 54 | 11 53 | 1 57 | 4 8 | 6 16 |
| 19 | 6 | ஞாயி | 6 16 | 8 12 | 9 57 | 11 39 | 1 28 | 3 31 | 5 42 | 7 50 | 9 50 | 11 49 | 1 53 | 4 4 | 6 12 |
| 20 | 7 | திங் | 6 12 | 8 8 | 9 53 | 11 35 | 1 24 | 3 27 | 5 38 | 7 46 | 9 46 | 11 45 | 1 49 | 4 0 | 6 8 |
| 21 | 8 | செவ் | 6 8 | 8 4 | 9 49 | 11 31 | 1 20 | 3 23 | 5 34 | 7 42 | 9 42 | 11 41 | 1 45 | 3 56 | 6 4 |
| 22 | 9 | புதன் | 6 4 | 8 0 | 9 45 | 11 27 | 1 16 | 3 19 | 5 30 | 7 38 | 9 38 | 11 37 | 1 41 | 3 52 | 6 0 |
| 23 | 10 | வியா | 6 0 | 7 56 | 9 41 | 11 23 | 1 12 | 3 15 | 5 26 | 7 34 | 9 34 | 11 33 | 1 37 | 3 48 | 5 56 |
| 24 | 11 | வெள் | 5 56 | 7 53 | 9 38 | 11 20 | 1 9 | 3 12 | 5 23 | 7 31 | 9 31 | 11 30 | 1 34 | 3 45 | 5 53 |
| 25 | 12 | சனி | 5 53 | 7 49 | 9 34 | 11 16 | 1 5 | 3 8 | 5 19 | 7 27 | 9 27 | 11 26 | 1 30 | 3 41 | 5 49 |
| 26 | 13 | ஞாயி | 5 49 | 7 45 | 9 30 | 11 12 | 1 1 | 3 4 | 5 15 | 7 23 | 9 23 | 11 22 | 1 26 | 3 37 | 5 45 |
| 27 | 14 | திங் | 5 45 | 7 41 | 9 26 | 11 8 | 12 57 | 3 0 | 5 11 | 7 19 | 9 19 | 11 18 | 1 22 | 3 33 | 5 41 |
| 28 | 15 | செவ் | 5 41 | 7 37 | 9 22 | 11 4 | 12 53 | 2 56 | 5 7 | 7 15 | 9 15 | 11 14 | 1 18 | 3 29 | 5 37 |
| 29 | 16 | புதன் | 5 37 | 7 33 | 9 18 | 11 0 | 12 49 | 2 52 | 5 3 | 7 11 | 9 11 | 11 10 | 1 14 | 3 25 | 5 33 |
| 30 | 17 | வியா | 5 33 | 7 30 | 9 15 | 10 57 | 12 46 | 2 49 | 4 59 | 7 8 | 9 7 | 11 7 | 1 10 | 3 22 | 5 30 |
| 31 | 18 | வெள் | 5 30 | 7 26 | 9 11 | 10 53 | 12 42 | 2 45 | 4 56 | 7 4 | 9 3 | 11 3 | 1 6 | 3 18 | 5 26 |
| பெப் | | | | | | | | | | | | | | | |
| 1 | 19 | சனி | 5 26 | 7 22 | 9 7 | 10 49 | 12 38 | 2 41 | 4 52 | 7 0 | 8 59 | 10 59 | 1 2 | 3 15 | 5 22 |
| 2 | 20 | ஞாயி | 5 22 | 7 18 | 9 3 | 10 45 | 12 34 | 2 37 | 4 48 | 6 56 | 8 55 | 10 55 | 12 58 | 3 11 | 5 18 |
| 3 | 21 | திங் | 5 18 | 7 14 | 8 59 | 10 41 | 12 30 | 2 33 | 4 44 | 6 52 | 8 51 | 10 51 | 12 54 | 3 7 | 5 14 |
| 4 | 22 | செவ் | 5 14 | 7 10 | 8 55 | 10 37 | 12 26 | 2 29 | 4 40 | 6 48 | 8 47 | 10 47 | 12 50 | 3 3 | 5 10 |
| 5 | 23 | புதன் | 5 10 | 7 6 | 8 51 | 10 33 | 12 22 | 2 25 | 4 36 | 6 44 | 8 43 | 10 43 | 12 46 | 2 59 | 5 6 |
| 6 | 24 | வியா | 5 6 | 7 2 | 8 47 | 10 29 | 12 18 | 2 21 | 4 32 | 6 40 | 8 39 | 10 39 | 12 42 | 2 55 | 5 2 |
| 7 | 25 | வெள் | 5 2 | 6 58 | 8 43 | 10 25 | 12 14 | 2 17 | 4 28 | 6 36 | 8 35 | 10 35 | 12 38 | 2 51 | 4 58 |
| 8 | 26 | சனி | 4 58 | 6 54 | 8 39 | 10 21 | 12 10 | 2 13 | 4 24 | 6 32 | 8 31 | 10 31 | 12 34 | 2 47 | 4 54 |
| 9 | 27 | ஞாயி | 4 54 | 6 50 | 8 35 | 10 17 | 12 6 | 2 9 | 4 20 | 6 28 | 8 27 | 10 27 | 12 30 | 2 43 | 4 50 |
| 10 | 28 | திங் | 4 50 | 6 46 | 8 31 | 10 13 | 12 2 | 2 5 | 4 16 | 6 24 | 8 23 | 10 23 | 12 26 | 2 39 | 4 46 |
| 11 | 29 | செவ் | 4 46 | 6 42 | 8 27 | 10 9 | 11 58 | 2 1 | 4 12 | 6 20 | 8 19 | 10 19 | 12 22 | 2 35 | 4 42 |
| 12 | 30 | புதன் | 4 42 | 6 38 | **8 23** | **10 5** | 11 54 | 1 57 | 4 8 | 6 16 | 8 15 | 10 15 | 12 18 | 2 31 | 4 38 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: தை 30உ (12-2-86) காலை 9-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8-23—10-05) மீனலக்னம்

# தை மாதக் கிரகநிலை

| | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | |
|---|---|---|---|---|---|
| | | ராகு | | | |
| கும்பம் | | தை மாதக் கிரக நிலை | | | கடகம் |
| மகரம் | சூ குரு | | | | சிங்கம் |
| | புத, சுக் நெப் | யூரே,சனி | குஜ கேது | | |
| | தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி | |

## கிரக மாற்றங்கள்

2வ (15-1-86) பகல் 10-04க்கு மகர-சுக்
8வ (21-1-86) பகல்8-50க்கு மகர-புத
9வ (22-1-86) இரவு 8-19க்கு விரு-குஜ
12வ (25-1-86)அதிகாலை 6-00க்கு கும்-குரு
25வ (7-2-86) இரவு 10-51க்கு கும்-புத
26வ (8-2-86) காலை 7-19க்கு கும்-சுக்
25வ குரு அஸ்தமனம்
இம்மாதம் முழுவதும் புதன் அஸ்தமனம்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தை | 2வ | (15-1-86) | காலை | 9-30 | முதல் | மீனம் |
| | 4வ | (17-1-86) | மாலை | 7-59 | ,, | மேடம் |
| | 7வ | (20-1-86) | காலை | 8-48 | ,, | இடபம் |
| | 9வ | (22-1-86) | இரவு | 9-14 | ,, | மிதுனம் |
| | 12வ | (25-1-86) | காலை | 7-21 | ,, | கடகம் |
| | 14வ | (27-1-86) | பகல் | 2-53 | ,, | சிங்கம் |
| | 16வ | (29-1-86) | இரவு | 8-31 | ,, | கன்னி |
| | 18வ | (31-1-86) | இரவு | 12-53 | ,, | துலாம் |
| | 20வ | (2-2-86) | பி.இ. | 4-17 | ,, | விருச்சிகம் |
| | 23வ | (5-2-86) | காலை | 6-53 | ,, | தனுசு |
| | 25வ | (7-2-86) | காலை | 9-20 | ,, | மகரம் |
| | 27வ | (9-2-86) | பகல் | 12-52 | ,, | கும்பம் |
| | 29வ | (11-2-86) | மாலை | 6-58 | ,, | மீனம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி தை மீ 30 வ காலை 9-00 மணிக்கு மீன லக்னம் என அறிந்து கொண்ட பின் மீனம் என்ற கட்டில் 'ல'என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும் போது கும்பலக்கினம் உதயமாகிறது. இலக்கினாதிபதி 10-ல் இருப்பினும், செவ்வாய், யுரேனஸ் இவர்களுடன் சேருவதால் நிம்மதியற்ற நிலையையும், இழப்புக்களையும், கஷ்டங்களையும் கொடுக்கும். மாதப் பிற்பகுதியில் சனி வியாழன் தீயபார்வை ஏற்படும்போது அரசியல் நிலைமையில் பல தாக்கங்கள் ஏற்படலாகும். தொற்று நோய்கள் பரவும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (தை மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 34 நிமிஷம்)

| வாரம் | 6...34 7...34 | 7...34 8...34 | 8...34 9...34 | 9...34 10...34 | 10...34 11...34 | 11...34 12...34 | 12...34 1...34 | 1...34 2...34 | 2...34 3...34 | 3...34 4...34 | 4...34 5...34 | 5...34 6...34 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அத்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# தை மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

14-1-86 — 12-2-86

சூரியன்: 14-1-86; காலை மணி 8-48ல் மகர ராசிப் பிரவேசம்.
14-1-86: உதயம் காலை 6-34 அஸ்தமனம் மாலை 6-03.
12-1-86: உதயம் காலை 6-35. அஸ்தமனம் மாலை 6-15.

சந்திரன்: 18-1-86: பூர்வாஷ்டமி மாலை 4-59.
26-1-86: பூரணை அதிகாலை 6-02.
2-2-86: அபராஷ்டமி இரவு 9-12.
9-2-86: அமாவாசை அதிகாலை 6-27
10-2-86: சந்திர தர்சனம்.

## கிரகங்கள்

புதன்: இக்கிரகம் இம்மாதம் முழுவதும் அஸ்தமனமாயிருப்பதால் பார்க்க முடியாது. 21-1-86ல் மகர ராசியிலும், 7-2-86 இல் கும்ப ராசியிலும் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: இக்கிரகமும் இம்மாதம் முழுவதும் அஸ்தமனமாயிருக்கும். 15-1-86ல் மகர ராசியிலும், 8-2-86ல் கும்ப ராசியிலும் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் கீழ் வானத்தில் 64 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் மாத முடிவில் 77 பாகை உயரத்திற் காணப்படும். 22-1-86ல் விருச்சிக ராசியில் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் சூரியாஸ்தமனமானபின் மேற்கு வானில் 28 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 5 பாகை உயரத்தில் காணப்படும். 7-2-86ல் மேற்கில் அஸ்தமனமடையும். 24-1-86ல் கும்பராசியில் பிரவேசிக்கிறது. 8-2-86ல் கும்ப ராசியில் அவிட்டம் 4-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

சனி: மாதத் தொடக்கத்தில் சூரிய உதயம் முன் கிழ்வானில் 46 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 74 பாகை உயரத்திற் காணப்படும். விருச்சிக ராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 19-1-86ல் அனுஷம் 4-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன் (Uranus): 15-1-86 இல் விருச்சிக இராசியில் கேட்டை 4-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

வருணன் (Neptune): தனு ராசியில் மூலம் 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

குபேரன் (Pluto): துலா ராசியில் சுவாதி 3-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

3-2-86 மாலை சந்திரனுக்கு வடக்கு செவ்வாய் 3 பாகை. இரவு சந்திரோதயமானபின் அவதானிக்கவும்.

4-2-86 அதிகாலை சந்திரனுக்கு வடக்கு சனி 5 பாகை; அன்று உதயம்முன் அவதானிக்க.

## ஹலீஸ் வால்வெள்ளி

15-1-86ல் சூரிய அஸ்தமனத்தின் பின் தென் மேற்கில் 30 பாகை உயரத்தில் 5வது ஒளிவகுப்பு நக்ஷத்திரமாகத் தோற்றும். வானம் நல்ல வெளிப்பாயிருந்தால் சிறிய தொலைநோக்கி மூலம் அவதானிக்க முடியும். இது மேலும் சூரியனைச் சமீபித்துச் செல்வதாலும் 5-2-86ல் சூரியனுடன் சேர்ந்து பின் பிரிந்து செல்வதாலும் இம்மாதத்தில் பார்க்க முடியாது.

முக்கிய குறிப்பு:

''சோதிடமலரில்'' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

# சோதிடம் கற்போம்


(கார்த்திகை இதழ் தொடர்ச்சி)


**களத்திர பாவம்**

இராசிகளுக்குரிய நிறங்களைக் கடந்த மாதம் படித்தோம். கிரகங்களுக்குரிய நிறம் முதலியன வருமாறு:

| கிரகம் | நிறம் | திக்கு | சொந்தம் |
|---|---|---|---|
| சூரியன் | சிவப்பு | கிழக்கு | பிதா |
| சந்திரன் | வெண்மை | வட.மே; | மாதா |
| செவ்வாய் | சிவப்பு | தெற்கு | சகோதரம் |
| புதன் | பச்சை | வடக்கு | மாமன் |
| வியாழன் | தங்கம் | வட.கிழ | — |
| வெள்ளி | வெண்மை | தெ.கிழ | — |
| சனி | கருமை | மேற்கு | — |
| இராகு | கருமை | தெ.மேற் | பிதுர்பாட்டன் |
| கேது | சிவப்பு | தெ.மேற் | மாதுர்பாட்டி |

ஒரு உதாரண சாதகமூலம் களத்திரத்தை ஆராய்வோம்.




துலாம் இலக்கினமாக நவாம்சம் மிதுனத்தில் வருகிறது. துலாத்துக்கு மிதுனம் 9-ம் இராசியாவதால் இலக்கினம் 26 பாகை 40 கலைக்கு அப்பாலிருக்கிறது என்பது பெறலாம்.

1. நிறம்

| | | |
|---|---|---|
| ஏழாம் இராசி மேடம் இதன்நிறம் | | சிவப்பு |
| ஏழில் நிற்கும் கிரகங்கள் | செவ்வாய் | சிவப்பு |
| | சூரியன் | சிவப்பு |
| | சுக்கிரன் | வெண்மை |
| ஏழாதிபதி | செவ்வாய் | சிவப்பு |
| ஏழாதிபன் நவாம்சாதிபன் | செவ்வாய் | சிவப்பு |

மேலே கண்ட எல்லா நிறங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது நல்ல நிறமுள்ள களத்திரம் அமைய வேண்டுமெனப் பெறப்படும். ஏழாதிபன் நிறத்தைப் பிரதானமாகக் கவனித்து ஏனையவற்ருேடு சேர்த்துப் பலன் பார்க்க.

2. ஏழாதிபனுகிய செவ்வாய் சூரியனேடு சேர்ந்திருக்கிருர். சூரியன் பிதா வழியைக் காட்டும். ஏழாதிபன் ஸ்வநவாம்சத்தில் சூரியசம்பந்தம் பெறுவது பிதாவழிச் சம்பந்தத்துக்குச் சார்பாகும்.


3. ஏழாதிபன் சரராசியில் இருக்கிருர். நவாம்சத்திலும் சரராசியில் இருக்கிருர்; சுக்கிரனும் சரராசியில் நிற்கிருர். இக்காரணங்களால் அன்னிய தேசத்திலிருந்து களத்திரம் அமையுமென அனுமானிக்கலாம்.

4. ஏழாதிபன் மேடத்தில் மேட நவாம்சத்தில் நிற்கிருர். மேடத்திற்குரிய திக்கு கிழக்கு. என்வே இச்சாதகிக்கு கிழக்குத் திக்கிலிருந்து களத்திரம் சித்திக்கும் எனலாம்.

இங்கு காட்டியவாறு ஏழாதிபன் சுக்கிரன் அவ்விராசிநாதன் அவை நிற்கும் இராசி, அவரைப் பார்த்த கிரகம் ஆகியவற்றின் நிறம், திக்கு முதலியனவற்றை ஆராய்ந்து பலன் காண வேண்டும். இவை ஒன்ருேடொன்று முரண்படின் கூடியபெலமுள்ள கிரகங்களைக் கொண்டு நிச்சயித்தல் வேண்டும்.

இரண்டாம் வீடு குடும்பஸ்தானம் என்று சொல்லப்படும். அதிலிருக்கும் கிரகங்கள் ஆகியவற்றைக் கொண்டு குடும்ப வாழ்க்கையையும் ஆராய்ந்தறிய வேண்டும்.

(வளரும்)




இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

**14-1-86 முதல் 12-2-86 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் சுவர்ண மூர்த்தியாக 10-ம் ராசியில் பவனி வருவது நன்ருகும். ஜனவரி 25-இல் வியாழனும் 11-ம் இடத்துக்கு வருகின்றமையால் உத்தியோக உயர்வு, தொழில் மேன்மை, குடும்ப சுகம், தேக சுகம், சிறப்படைதல் வங்கி நிலை உயர்தல், வியாபாரம் பெருகுதல் போன்றவை நிகழலாகும். முன் தடைப்பட்டிருந்த கருமங்கள் கைகூடும். அந்நியர் உதவி, பிறநாட்டுப் பொருள் வரவு முதலானவையும் கிடைக்கும். புத்திர உதவி, வருமானம் அதிகரித்தல், பிறநாட்டு பிரயாண வாய்ப்பு என்பனவும் கிட்டும்.

குடும்பஸ்தர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வீட்டில் சுபகருமங்கள் நிகழும். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். வருமானம் அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக அமையும். வெளிநாட்டுத் தொடர்படைய வியாபாரங்களில் முன்னேற்றம் உண்டாகும். புதிய முதலீடுகளையும் ஆரம்பிக்கலாம். நிதி நிலைமை சிறப்புறும்.

உத்தியோகத்தர்களுக்கு தொழில் மேன்மை உண்டாகும். மேலதிகாரிகளின் பாராட்டுதல்களும், பதவிச்சிறப்பும் ஏற்படலாகும். சக உத்தியோகத்தரின் ஒத்துழைப்பும் அவ்வப்போது கிடைக்கப்பெறும்: அரசாங்க உத்தியோகத்தருக்கு சிறப்பான பலன் கிட்டும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி அட்டமத்தில் சஞ்சரித்தாலும், வியாழன் 11-ல் இருப்பதால் விவசாயம் சுமாராக விருத்திபெறும்: பயிர் உற்பத்தி, நல்ல அறுவடை, மானியம் என்பன

கிடைக்கலாகும். எனினும் விடாமுயற்சி அவசியம் வேண்டும்.

தொழிலாளருக்கு வேலை வசதிகள், அதிகரிக்கும். தொழிலாளர் மத்தியில் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் கிடைக்கும். சக தொழிலாளரின் அன்பும், ஆதரவும் தாராளமாகக் கிட்டும். வேலை கொள்வோரிடத்தில் பாராட்டுப் பெறுவர்.

மாணவர்களுக்கு கல்விப்பலன் நன்ருக உள்ளது. அட்டமத்துச் சனியின் சஞ்சாரத்தால் சில தடைகள் ஏற்படலாம். எனினும் முக்கிய கிரக சஞ்சாரங்களால் கல்வித் தேர்ச்சி, கிட்டும். ஆசிரியர்-மாணவர் உறவு வளரும்.

பெண்களுக்கு விவாகமாகாதோர் விவாகப் பலனடைவர். காதல் விவகாரங்கள் களிப்பாக இருக்கும். குடும்பப் பெண்கள் கணவன்மாரின் அன்புக்குப் பாத்திரமாவர்.

அதிஷ்டநாட்கள்: ஜன: 18,19,25 26,27,28
பெப்: 5,6,9,10

துரதிஷ்டநாட்கள்: ஜன 15,16 30,31
பெப் 3,4,12.



## இடபம்

கார்த்திகை 2, 3, 4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

இடபராசியிற் பிறந்தவர்களுக்கு சூரிய பகவான் தாம்ரமூர்த்தியாக 9-ம் ராசியில் சஞ்சாரம் செய்கின்ருர். மூர்த்திபலம் குறைந்திருந்தாலும் ஸ்தானபெலம் நன்ருக இருப்பதனுல் பொருள் வருமானம், தொழில் உயர்வு, இடமாற்றம், அரசாங்க உதவி என்பன கிடைக்கப் பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி, புத்திரர் உதவி என்பன கிடைக்கப்பெறினும் வியாழன் 10-ம் வீட்டுக்கு வருவதினுல் கஷ்டபலன்களும் கலந்து நிகழும். சனி 7-ல் சஞ்சரிப்பதனுல் குடும்பத்தில் கணவன்-மனைவி உறவில் விரிசல் ஏற்படலாகும். இருப்பிட மாற்றங்களும் உண்டாகும். விபத்துக்களைப் பற்றியும் அவதானமாக இருக்கவும்.

குடும்பஸ்தர்களுக்கு குடும்பஉறவு சுமாராக இருக்கும். எதிர்பாராத செலவினங்களும் ஏற்படலாகும். புத்திரர் உதவிகள் கிட்டும். குடும்ப நல்லுறவு திருப்திதரும். பெரியோர்களின் விரோதங்களும் ஏற்படலாம்.

உத்தியோகத்தர்களுக்கு உத்தியோக உயர்வுடன் கஷ்டப்பிரதேச இடமாற்றங்களும் ஏற்படும். இலருக்குப் பதவியிறக்கம் ஏற்படினும் சமாளிக்கக் கூடியதாயிருக்கும். சக ஊழியருடன் வாக்குவாதமேற்படினும் ஈற்றில் சுமுகநிலை வரும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் பெருகும். செட்டி புதன் 8-ல் நின்ருலும், பின்னர் 9-ம் இடத்துக்கு மாற்றமடைவதால் முதலீடுகள் லாபம் தரும். வங்கிநிலையும் சிறப்புற அமையும். வாடிக்கையாளரின் அபிமானமுண்டாகும்.

விவசாயிகட்கு விவசாயக்கிரகம் 7-ல் நிற்பதனுல் விவசாய முன்னேற்றம் ஏற்படலாகும். நல் விளைச்சல் உண்டு. விவசாயப்பண்ணை உற்பத்தியும் சிறப்புறும்.

தொழிலாளர்கட்கு தொழில் சுமுகமாக அமையினும் மனச்சஞ்சலமுண்டாகும். தொழில் ஒப்பந்தங்கள் நன்மைதரும், முதலாளி - தொழிலாளி உறவு வலுக்கும். விபத்துக்களைப்பற்றி அவதானமாக இருக்கவும்.

மாணவர்கட்கு கல்வியில் ஆக்கமும், ஊக்கமும் உண்டாகும், கலைத்துறை, சட்டத்துறை மாணவர் கூடிய முன்னேற்றம் பெறுவர். பரீட்சைகளிற் சித்தி, போட்டிகளில் வெற்றி என்பனவும் உண்டு.

பெண்களுக்கு எண்ணியவை எண்ணியாங்கு நடைபெறும். கணவன்மாரின் அன்புக்குப் பாத்திரமாக நடப்பது அவசியம். விவாகமுயற்சிகளில் தடை, தாமதமேற்படினும் ஈற்றில் வெற்றிதரும்.

அதிஷ்ட நாட்கள்: ஜன 15,16,20, 21, 28, 29, 30
பெப் 7, 8, 12

துரதிஷ்ட நாட்கள்: ஜன 18, 19, 31 பி. இ.,
பெப் 1, 5, 6



## மிதுனம்

மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இவ்விராசியினர்க்கு இம்மாதம் சூரியபகவான் ரஜதமூர்த்தியாகி அட்டமத்தில் சஞ்சரிக்கின்ருர்.

மூர்த்திபலம் சிறப்படையினும், ஸ்தானபலம் நன்றாக இராமையினால் சுபபலன்கள் குறைந்தே காணப்படும். எதிர்பார்க்கும் கருமங்கள் நடைபெறாது. தொழில் துறைகளில் பிரச்சினைகள் உண்டாகும். அரசாங்க விரோதப் போக்குகள் தலைதூக்கி நிற்கும். தேகசுகம், குடும்பசுகம் என்பன இடையிடையே பாதிப்படையும். பொருள் நட்டம் வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள் அனுகூலமாகாமை, விபத்துக்கள் என்பன ஏற்படலாகும். பகை, விரோத சம்பவங்களும் இடம்பெறலாகும். எனினும் 25-1-86ல் ஏற்படும். வியாழ மாற்றத்தின் பின்னர் யாவும் நல்லபடியாக அமையும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப வருமானம் தளர்வுறும். குடும்பத்தில் சுகவீனங்கள் ஏற்படலாகும். புத்திரரால் கஷ்டபலனே கிடைக்கப்பெறும். சேர்ந்தவர்களுடன் வாக்குவாதங்களும் ஏற்படும்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே இருக்கும். முதலீடுகளில் லாபத்திற்குப் பதிலாக நட்டமே முன்னிற்கும். வங்கிநிலை திருப்தியளிக்காது. அனாவசியச் செலவுகளும் ஏற்படலாகும். கறுப்புச்சந்தை வியாபாரிமார் வியாழமாற்றத்தின்பின் நற்பலனடைவர்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளால் தண்டிக்கப்படவேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வேலைப்பழு அதிகமாகும். வசதியான இடமாற்றங்கள் கிடைக்காது. சக ஊழியர்களுக் கிடையில் கருத்துமோதல்கள் ஏற்படும்.


விவசாயிகளுக்கு விசவாயி சனி 6-ம் இடத்தில் இருப்பதனால் விவசாயம் பெரும் விளைச்சல் தரும். அரச உதவி கிடைக்காது. பண்ணைவிவசாயிகளுக்கு கூலியாட்களின் பிரச்சினை ஏற்படலாம். பயிர் வளர்ச்சி நற்பலனைத்தரும்.

தொழிலாளர்களுக்கு தொழில் முயற்சிகள் நற்பலனைத் தரமாட்டாது. சக தொழிலாளரின் வெறுப்புக்காளாக நேரிடலாம். நாட்சம்பள வேலையாட்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்காது. எனினும் வியாழ மாற்றத்தின்பின் முன்னேற்றங்கள் ஏற்படலாம்.

மாணவர்கட்கு கல்வி மந்தநிலையிலேயே இருக்கும். ஆசிரியர் - மாணவர் உறவு திருப்திதராது. கல்வியில் வெறுப்பு, மறதி போன்றன மிகுதியாகும். கல்வித்தேர்ச்சிகளும் நற்பெறுபேறு தரமாட்டாது.

பெண்களுக்கு காதல் கிரகம் சுக்கிரனின் சஞ்சாரம் நன்றாகவில்லை. எனவே கணவன்மாருடன் வெறுப்பு, காதலில் ஏமாற்றம் குடும்பப் பிணக்கு என்பன ஏற்படலாகும்.

அதிஷ்ட நாட்கள்: ஜன 18,19,23,24,30,31
பெப் 1, 9, 10
துரதிஷ்ட நாட்கள்: ஜன 20, 21
பெப் 3, 4, 7, 8



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இந்த இராசியினருக்கு இம்மாதம் சூரியபகவான் லோகமூர்த்தியாக 7-ம் ராசியில் சஞ்சரிக்கிறார். அத்துடன் 4-ல் குஜ, கேது, 5-ல் சனி ஆகியவற்றின் சஞ்சாரங்களும் நன்மைபயப்பனவாக இல்லை. சுற்றாடலில் பிரச்சினைகள் ஏற்படுதல் இனத்தவர்களுடன் கோபதாபம் ஏற்படல் பொருட்செலவு, நினைத்த கருமம் கைகூடாமை போன்றன ஏற்படும். எவ்விடயத்திலும் அலைச்சல் பிரயாசை அதிசமாகும். அந்நிய நாட்டுப் பிரயாண வாய்ப்பும் நலம் தராது. எவ்விடயத்தையும் தீர ஆலோசித்தபின்னர் செய்வது நன்று.

குடும்பஸ்தர்களுக்கு குடும்பத்தில் அமைதி குன்றும். பிரிவினைகள், கிளர்ச்சிகள், வாக்குவாதங்கள் அடிக்கடி நிகழும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் பெருகும். குடும்பத்தில் துக்க சம்பவங்களும் நிகழும்.

வர்த்தகர்களுக்கு செட்டி புதன் மறைவு பெறுதலினால் வியாபாரம் சிறக்காது. வாடிக்கையாளரின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். சகஊழியர்கள் முக்கிய தருணத்தில் காலை வாரிவிடுவர் வங்கிநிலை பற்றுக்குறையாக இருக்கும்.

உத்தியோகத்தர்கட்கு பதவியிறக்கம் அல்லது பதவியிழப்புக்கள்கூட ஏற்படலாம். எதிலும் கண்ணுங்கருத்துமாக தொழிலைக் கவனித்தால் தப்பித்துக்கொள்ளலாம். மேலதிகாரிகளின் கோபத்துக்காளாக நேரிடும்.

விவசாயிகளுக்கு பயிர்வளர்ச்சிக்குப் பதிலாக பயிரழிவு ஏற்படும். விவசாயப் பண்ணைகளும்

போதிய லாபம் தராது. விவசாய காரகன் 5-ல் நிற்றலால் விவசாயம் பலிதமின்மையையே காட்டுகிறது.

தொழிலாளர்கட்கு தொழில் வாய்ப்புக்கள் பெருமளவில் குன்றும். தொழில் பிணக்குகள் அதிகமாகும். தொழில் ஒப்பந்த வேலைகளைச் செய்து முடிக்காது திண்டாடுவர். நாட்கூலி வேலையாட்கள் மிகவும் கஷ்டபலனடைவர்.

மாணவர்கட்கு கல்வியிலும் மத்திமபலனே காட்டுகிறது. அலட்சியப் போக்கும், கல்வியில் ஆர்வம் குறைந்தும் இருக்கும். கல்வித் தேர்ச்சிகள் முன்னேற்றம் தராது.

பெண்களுக்கு இம்மாதம் நன்மை, தீமை கலந்த பலன்களையே அனுபவிப்பர். காதலில் சிக்கல்கள், கணவனின் வெறுப்புக்கள், புத்திரரின் தொல்லைகள் என்பன ஏற்படலாகும்.

அதிஷ்ட நாட்கள்: ஜன 15, 16, 25, 26
பெப் 1, 2, 3, 4, 12

துரதிஷ்ட நாட்கள்: ஜன 23, 24
பெப் 5, 6, 9, 10



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசிக்காரருக்கு இம்மாதம் சூரியன் தாம்ர மூர்த்தியாகி 6-ம் ராசியில் வியாழனுடன் சஞ்சரிப்பது உகந்ததல்ல. பொதுவாக இம்மாதம் கஷ்ட பலன் கூடுதலாகவே இருக்கும். பொருள் வருமானம் இருக்காது. பகை விரோதச் சம்பவங்கள் நிகழும். தேகசுகம், குடும்ப சுகம் நன்மை பயக்காது. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அலைச்சல் பிரயாசையின் பின்னரே கருமங்கள் நிகழப்பெறும். தொழில் விடயங்களில் இழுபறி நிலை இருக்கும். வங்கி நிலைகளும் பற்றுக்குறையாகவே இருக்கும். சுற்றத்தவர்களுடன் வாக்குவாதங்கள், பகை விரோதம் என்பன உண்டாகும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப வருமானம் தளர்வுறும். குடும்பத்தவர்களுக்கு சுகவீனம் உண்டாகி மருந்தும் கையுமாக இருக்க நேரிடும். குடும்பத்தில் பிணக்குகள் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். புத்திரரால் உதவிக்குப் பதிலாக உபத்திரவமே உண்டாகும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்தமாகவே இருக்கும். வங்கிநிலை பற்றுக்குறையாகவே இருக்கும். அவசர புத்தியும், முற்கோபமும் வாடிக்கையாளரின் மனத்தைப் புண்படுத்தும். அநாவசியச் செலவும் ஏற்படலாகும்.

உத்தியோகத்தர்களுக்கு கடமையைச் சரிவர செய்ய முடியாது சிரமப்படுவர். மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் தோன்றக்கூடும். கருத்து வேறுபாடுகள் தோன்றக்கூடும். கஷ்டப் பிரதேச இடமாற்றம் உண்டாகலாம்.

விவசாயிகளுக்கு விவசாயம் பலிதமளிக்காது. உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாமல் திண்டாட நேரிடும். மானிய உதவி, பசளை முதலியன உரியநேரத்தில் கிடைக்காது. பண்ணை விவசாயிகளுக்கு பிரச்சினைகள் ஏற்படும்.


தொழிலாளர்கட்கு வேலைவாய்ப்புக்கள் குன்றும். அரச கூட்டுத்தாபனத் தொழிலாளர்களுக்கு தொழில் வசதிகள் அதிகரிக்கும். ஒப்பந்த வேலைகளும் லாபத்துக்குப் பதில் நட்டத்தையே தரும். வேலைப்பளு அதிகரிக்கும்.

மாணவர்கட்கு கல்வியில் குழப்பநிலை தொடரும். அதிபர்-ஆசிரியர்-மாணவர் உறவில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். பரீட்சை நேரங்களில் மறதி, சுகவீனம் என்பன ஏற்படலாகும்.

பெண்களுக்கு இம்மாதம் உகந்ததல்ல. காதல் விவகாரங்கள் தோல்வியைத் தரும். விவாகமாகாதோர்க்கு விவாக முயற்சிகள் இழுபறியிலேயே இருக்கும், குடும்பத்தில் நிம்மதி குன்றும்.

அதிஷ்ட நாட்கள்: ஜன 18, 19, 23, 24, 28,
பெப் 3, 4, 5, 6.

துரதிஷ்ட நாட்கள்: ஜன 15, 16, 25, 26,
பெப் 7, 8, 11, 12



## கன்னி

உத்தரம் 2,3 4, அத்தம், சித்திரை 1, 2

இவர்களுக்கு இம்மாதம் சூரியன் சுவர்ண மூர்த்தியாக குருபகவானுடன் 5-ம் இராசியில்

சஞ்சரிப்பது மிகவும் நன்றாகும். கடந்த மாதம் ஏற்பட்ட கஷ்டங்களுக்கு இம்மாதம் சந்தோஷமாக இருக்கும். பொருள்வருமானம் அதிகரித்தல் அரசஉதவிகள் கிட்டுதல், வியாபாரம் பெருகுதல், வீட்டில் சுபசோபன நிகழ்ச்சிகள் நடைபெறுதல் தேகநலம், குடும்பநலம் சிறப்படைதல் போன்ற இன்னோரன்ன நற்பலன்கள் நிகழ இடமுண்டு. புத்திரரால் உதவி கிட்டும். பெரியோர் மதிப்பு, கௌரவம் என்பனவும் உண்டாகும்.

குடும்பஸ்தர்களுக்கு குடும்ப வருமானம் அதிகரிக்கும். குடும்ப நல்லுறவில் அபிவிருத்தி காணப்படும். கணவன் - மனைவி உறவு வலுக்கும். சந்தோஷகரமான செய்திகள் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் பெருகும். முதலீடுகளை ஆரம்பிப்பதற்கும் ஏதுவான காலமாகும். வங்கிநிலை திருப்தியளிக்கும். கறுப்புச்சந்தை வியாபாரம் நன்மையளிக்கும்,

உத்தியோகத்தர்கட்கு பலவகையிலும் சிறப்பான மாதமாகும். மேலதிகாரிகளின் பாராட்டுக்களும், நற்பெயரும் கிட்டும். வசதியான இடமாற்றம், சம்பள உயர்வு, சக ஊழியரின் ஒத்துழைப்பு என்பனவும் கிட்டும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைகள் நற்பலன் தரும். விளைச்சல் பெருகும், விவசாயப்பண்ணை உற்பத்தியும், சந்தை வாய்ப்பும் கிட்டும், அரச மானியம் முதலானவையும் கிட்டும்.

தொழிலாளர்கட்கு சனிபகவான் 8-ல் நற்சஞ்சாரம் செய்வது சிறப்பாகும். முதலாளிமார் ஆதரவு நல்குவர். தொழில் ஒப்பந்தங்களும் நற்பலன் தரும்,

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமுண்டாகும். ஆசிரியர்களின் அன்பும் ஆதரவும் சரிவரக் கிட்டும். போட்டிகளில் வெற்றி, பரீட்சைகளிற் சித்தி என்பனவும் உண்டாகும்.

பெண்கட்கு காதல் கிரகம் இருதயஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் காதலில் ஈடுபட்டோர் களிப்படைவர். விரும்பியவை உரியநேரத்தில் கிட்டும். குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் அன்பு கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: ஜன 20,21,25,26,30
பெப் 5,6,7,8

துரதிஷ்ட நாட்கள்: ஜன 18,19,27,28
பெப் 9 பகல், 10



# துலாம்

**சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

துலாராசியில் ஜனித்தோர்க்கு சூரியபவான் 4ம் ராசியில் ரஜதமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வது நன்றெனினும், ஏழரைச்சனியும் நிகழ்வதால் நன்மை, தீமை கலந்த பலன்களே நிகழும். தேகசுகம், திருப்தியாக இருக்கும். நினைத்த காரியங்கள் பலத்த சிரமத்தின்பின்பே கைகூடும். ஜன்மத்தில் செவ்வாய், கேது சஞ்சரிப்பதும் கஷ்டபலன்களைக் கொடுக்க ஏதுவாகும். வியாபாரம் நற்பலன் தரும். முதலீடுகளால் வருமானம் உண்டாகும். பகை, விரோதச் சம்பவங்கள் ஏற்படினும் ஈற்றில் வெற்றி உங்களுக்கே, விபத்துக்களைப் பற்றியும் அவதானம் வேண்டும்.

குடும்பஸ்தர்களுக்கு குடும்ப நல்லுறவு விருத்திபெறும். புத்திரரால் உதவிக்குப் பதிலாக உபத்திரவமே உண்டாகும். வீட்டில் சுபகருமங்கள் நடைபெற பல முட்டுக்கட்டைகள் ஏற்படலாகும். குடும்ப வருமானம் பெருமளவில் குன்றும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் நல்ல நிலையடையும், வங்கிநிலை திருப்தியளிக்கும். புதிய முதலீடுகளை 25-1-86இல் நிகழும் வியாழ மாற்றத்தின் பின் மேற்கொண்டால் நன்மையளிக்கும். பங்குமுதலீடுகள் எதிர்பார்த்த லாபம் தராது.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகளின் பாராட்டுகளும், பதவியுயர்வும் உண்டாகலாம். சகஉத்தியோகத்தரால் ஒத்துழைப்புக் கிட்டும். சிக்கலான இடமாற்றங்களும் ஏற்படலாம். கடமைகளை மேற்கொள்வதிலும் இடையிடையே சிரமமுண்டாகும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதத்தால் நட்டமுண்டாகும். வெள்ளம் முதலியவற்றால் பயிரழிவு உண்டாகலாம். மானிய உதவிகள், பசளை வசதிகள் குன்றும். பணவருமானம் ஓரளவு முன்னேற்றம் தரும். மழையால் அறுவடை பாதிக்கப்படலாம்.

தொழிலாளர்கட்கு அமைதிக் குறைவுகள் பிரச்சினை தரும். தொழில் ஒப்பந்தங்கள் நன்மை பயக்காது. நாட்கூலி வேலையாட்களுக்கு ஊதியப் பற்றாக்குறையாக இருக்கும். தொழிலாளர் மத்தியில் கருத்துவேறுபாடும் ஏற்படலாகும்.

மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் உண்டாயினும் முயற்சிக்கேற்ற பலன் கிடைப்பது கஷ்டம் ஆசிரியர் மாணவர் உறவில் விரிசல் ஏற்படலாகும். கல்வித் தேர்ச்சிகள் திருப்தியளிக்காது.

பெண்கட்கு நினைத்தவை அனுகூலமாவதில் தடையேற்படலாம். காதலில் ஈடுபட்டோர் களிபேருவகை அடைவதற்குப் பதிலாக ஏமாற்றமடைவர், குடும்பப் பெண்களுக்கு நன்மையுண்டு.

அதிஷ்டநாட்கள்: ஜன 23,24,27மாலை,28,
பெப் 17,8,9,பி.ப.10,

துரதிஷ்டநாட்கள்: ஜன 15பி.ப.,16,20பகல்,21
பெப் 1,11பி.ப.12




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியன் லோக மூர்த்தியாக 3-ம் ராசியில் சஞ்சாரம் செய்கின்றார். மூர்த்திபலம், ஸ்தான பலம் குன்றியிருப்பதுடன் ஏழரைச்சனியும் நடைபெறுவதனால் நற்பலன்களுக்குப் பதிலாக தீய பலன்களே நிகழும். குடும்ப சுகம், தேகசுகம் என்பன பாதிப்படையும். பேரிழப்புக்கள், விபத்துக்கள் வருமானமின்மை, போன்றனவும் நிகழலாம். செலவும் அதிகரிக்கும். 12-ல் செவ்வாய் கேது என்பனவற்றின் சஞ்சாரங்களும் உகந்ததாக இல்லை. பிறநாட்டுத் தொடர்புகள் சிக்கல்களில் மாட்டிவிடும்.

குடும்பஸ்தர்களுக்கு குடும்பத்தில் நிம்மதி இராது. வாக்கு விரோத சம்பவங்கள் மேலோங்கி நிற்கும். புத்திரரால் உதவி கிட்டாது. பெரியோரின் அவமதிப்புகளும் ஏற்படலாகும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாக இருக்கும். முதலீடுகள் தேங்கியிருக்கும். புதிய முதலீடுகளை ஆரம்பிப்பது நன்றல்ல. கறுப்புச்சந்தை வியாபாரம் செய்வோர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வாடிக்கையாளரின் வருகை குன்றும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் அவப்பேருக்கு ஆளாக வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாகும். சிலருக்குப் பதவி நீக்கம் அல்லது பதவியிறக்கம் உண்டாகும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி ஜன்மராசியில் சஞ்சரிப்பதால் ஆக்கத்திற்குப் பதிலாக அழிவு கூடுதலாக இருக்கும். பயிர் வளர்ச்சி, மழை முதலிய இயற்கையின் சீற்றங்களால் பாதிக்கும்.

தொழிலாளர்க்கு தொழிற்பிணக்குகள் ஏற்படும். வேலை கொள்வோரிடத்தில் பிரச்சினை உண்டாகும். நாட்கூலி வேலை செய்வோர் அன்றுடத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாமல் அல்லலுறுவர்.

மாணவர்களுக்கு கல்வியைத் தொடருவதில் சிக்கல்கள் தோன்றும். ஆசிரியர்-மாணவர் உறவு திருப்திகரமாக இருக்காது. சட்டம், கலைத்துறை மாணவர்கட்கு ஓரளவு நற்பலனுண்டு.

பெண்கட்கு விவாகமாகாதோர்க்கு விவாகப் பலன் கேள்விக் குறியாகவேயிருக்கும். காதலர் ஏமாற நேரிடும். குடும்பத்தில் வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

அதிஷ்ட நாட்கள்: ஜன 15, 16, 25, 26, 30.
பெப் 3, 4, 9 பி.ப, 10,11,12

துரதிஷ்ட நாட்கள்: ஜன 17பி.ப,18,19,23,24.
பெப் 1,2பகல்.




மூலம், பூராடம் உத்தராடம் 1-ம் கால்

இந்தராசியிற் பிறந்தோர்க்கு இம்மாதம் தாம்ரமூர்த்தியாக 2-ம் ராசியில் சஞ்சாரம் செய்வதோடு, ஏழரைச்சனியும் நடைபெறுகிறது. உடல், உளப் பாதிப்புகளும் நிகழலாகும். முன் தடைப்பட்டிருந்த காரியங்கள் இழுபறியிலேயே இருக்கும். அந்நியர் உதவி, அந்நியதேசப் பொருள் வரவு என்பன நன்றாக இராது. குருபகவான் 2-ல் இருத்தலின் கஷ்டபலன்களைத் தணிக்க ஏதுவாகும். 25-1-86 இல் வியாழமாற்றத்தின் பின் மேலும் கஷ்டமேற்படும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப வருமானம் வீழ்ச்சியுறும். குடும்ப நல்லுறவு திருப்திதரும். சுப கருமங்களுக்குக் காலநேரம் இல்லாதிருக்கும். புத்திரரால் நற்பலன் குன்றியிருக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாரான முன்னேற்றம் காணப்படும். 12-ல் சனி இருப்ப

தால் பணத்தைச் செலவழித்து முதலீடு செய்ய மனம் வராது. பவுண், பொன் வியாபாரிகள் லாபமடைவர்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளால் அவ மதிப்பு உண்டாகும். சகஊழியரின் ஒத்துழைப்பு கிடைக்காமல் போகலாம். கஷ்டப்பிரதேச இட மாற்றம் ஏற்படவும் கூடும்.

விவசாயிகட்கு விவசாயி சனி 12-ல் சஞ்ச ரிப்பது நன்றில்லையாயினும் பூமிகாரகன் லாபத் தானத்தில் சஞ்சரிப்பது நன்மையாகும். தோட் டச் செய்கைகள் முன்னேற்றந்தரும்.

தொழிலாளர்கட்கு வேலை வாய்ப்புக்கள் வெற்றிகரமாகக் கிடைக்காது. பலத்த சிரமத்தின் பின்பே கைகூடும். நாட்கூலி வேலையாட்களின் ஊதியம் குன்றியும் காணப்படும்.

மாணவர்களுக்கு கல்வியில் ஓரளவு நற்பல னுண்டாகும். கலை, சட்டத்துறை, விஞ்ஞானத் துறை மாணவர் முன்னேற்றமடைவர். சுயமுயற்சி யுடையவர்கள் பரீட்சையில் சித்திபெறுவர்.

பெண்களுக்கு இம்மாதம் சிறப்பானதாகும். காதலர்களுக்கும் கனிவான காலமாக உள்ளது. விவாகமாகாதவர்கட்கு விவாகப்பலன் உண்டு.

அதிஷ்ட நாட்கள்: ஜன 15, 16, 17, 18, 19, 28; பெப் 5, 6, 11 பி.ப. 12

துரஷ்ட நாட்கள்: ஜன 20, 21, 25, 26, பெப் 3, 4




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2;

இவர்களுக்கு இம்மாதம் சூரியபவான், குருவு டன் சேர்ந்து ரஜதமூர்த்தியாக ஜன்மராசியில் சஞ்சரிக்கின்றார். மூர்த்திபெலம் சிறப்படைவதால் ஓரளவில் நற்பலன்களை அடையக்கூடியதாக இருக் கும். ஜன்மக்குரு இடையிடையே சிறுசிறு கஷ்டங் களை ஏற்படுத்தினாலும் அவை 25-1-86 வியாழ மாற்றத்தின் மேல் அற்றுப்போய் நன்மைகளை அனுபவிக்க ஏதுவாகும். காரியசித்தி, நினைத்தவை நினைத்த நேரத்தில் அனுகூலமாதல், பெரியோர் மதிப்பு, பாராட்டு சகோதரர் உதவி, பூமிவருமா னம் போன்ற இன்னோரன்ன நற்பலன்களும் நிகழ இடமுண்டு. எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் ஏற்படினும் அவற்றைச் சமாளித்துக்கொள்ளும்;

குடும்பஸ்தர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். குடும்ப அங்கத்தவர்களுடன் மகிழ்ச்சி நிலவும். வீட்டில் சுபகருமங்கள் நிகழ இடமுண்டு. புத்திரர் சகோதரர் உதவிகளும், பெரியோர் மதிப்புமுண்டு.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் பெருகி வளமு டன் திகழ்வர். முதலீடுகளால் லாபம் பெருகும். புதிய முதலீடுகள் ஆரம்பிப்பதைப் பொறுத்து ஆரம்பித்தல் நன்மை தரும்.

உத்தியோகத்தர்களுக்கு, அதிகாரிகளின் நம் பிக்கையுடன் தொழில் புரிவர். சகதொழிலாள ரின் ஒத்துழைப்பும் இருக்கும். சிலருக்கு பதவியு யர்ச்சி, அல்லது பதவி மாற்றம் என்பன கிட்டும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி லாபத்தில் விவ சாயம் விருத்தியடையும். பயிர்வளர்ச்சி, விளைச் சல், அறுவடை காலத்தில் நல்லகாலநிலை, விளைவு களைச் சந்தைப்படுத்துவதில் முன்னேற்றம் உண்டு

தொழிலாளர்களுக்கு தொழிலில் சுமுகநிலை தோன்றும். சகதொழிலாளரின் ஆதரவும், முத லாளியின் பாராட்டுதல்களும் அவ்வப்போது கிடைக்கும்.

மாணவர்கட்கு கல்விவசதிகள் அதிகரிக்கும். உயர்கல்வி, வெளிநாட்டுக் கல்வி பயிலும் மாண வர் சிறப்பான முன்னேற்றமடைவர். ஆசிரியர் மாணவர்களிடையே நல்லுறவு வலுக்கும்.

பெண்களுக்கு சுக்கிரன் ஜன்மராசியில் வரு வதால் சந்தோஷகரமானதாகும். காதல் விவகா ரங்கள் களிப்பைத்தரும். குடும்பப்பெண்கள் கண வன்மாரின் ஆவலைப்பூர்த்தி செய்யும் விதத்தில் நடப்பர்.

அதிஷ்ட நாட்கள்: ஜன 18,19,20,21,30 பெப் 3,4,7,8.

துரதிஷ்ட நாட்கள்; ஜன 23,24,27,28, பெப்5,6.




அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

இவர்களுக்கு இம்மாதம் சூரியன் சுவர்ண மூர்த்தியாகி 12-ம் ராசியில் சஞ்சரிக்கின்றார்.

சூரியனின் ஸ்தானபலம் குன்றினும் மூர்த்திபலம் சிறப்படைவதால் நற்பலன்களுண்டு. தேகசுகம் பாதிப்புறும். 12-ல் குரு இருப்பதால் எந்த அலுவலும் தடைதாண்டியே நடைபெறச் செய்யும். வியாபாரம் ஓரளவு சிறப்படையும். குடும்பத்தவர்களிடையே கலகலப்பு ஏற்படலாகும். குரு பகவான் 25-1-86 இல் ஜன்ம ராசிக்கு வந்தபின் கஷ்டபலன்கள் மேலும் அதிகரிக்கும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதி குன்றும். இடையிடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டு நற்பலன் காண்பர். குடும்பத்தில் வீண் செலவுகள் ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் லாபம் ஏற்படாவிடினும் நட்டம் நிகழமாட்டாது. ஊழியர்கள்கூட சமயத்தில் நம்பிக்கையின்றி நடக்க முயற்சிப்பர். சாதுரியமாகச் சமாளிக்க வேண்டும்.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகளுடன் மன மகிழ்ச்சி உண்டாகும். சக தொழிலாளர் மத்தியில் நற்பெயர் உண்டாகும். பதவி உயர்ச்சி, பாராட்டுகள் என்பனவும் கிட்டும்.

விவசாயிகளுக்கு விவசாயம் நன்கு இருக்கும். பயிர் உற்பத்தி, விளைச்சல் என்பன சிறப்புற அமையும். பண்ணை விவசாயம் இலாபம் தரும்.

தொழிலாளர்கட்கு தொழிற் பிரச்சினைகள் தீரும். வேலை வாய்ப்புக்கக்கள் உரிய நேரத்தில் கிட்டும். ஒப்பந்த வேலைகளும் இலாபம் தரும்.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமுண்டு. கல்வியில் ஊக்கமும், ஆக்கமும் ஏற்படலாகும்; கணித விஞ்ஞானத்துறை மாணவர்கட்கு உயர் கல்வி வாய்ப்புகளும் கிட்டும்.

பெண்களுக்கு சிக்கல்களுக்கு மத்தியில் நற்பலன்கள் கிட்ட வழியுண்டு. குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் ஆதரவு உண்டு. தொழில் புரியும் பெண்கள் நன்மையடைவர்,

அதிஷ்ட நாட்கள்: ஜன 20, 21, 22, 23, 24,
பெப் 5, 6, 9, 10.

துரதிஷ்ட நாட்கள்: ஜன 25 26, 30, பெப் 7, 8,




பூரட்டாதி 4 ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியினர்க்கு சூரியன் லோகமூர்த்தியாக 11ம் ராசியில் சஞ்சரிக்கின்றார். ஸ்தானபலம் நன்றாயினும் மூர்த்திபலம் குன்றியிருப்பதால் தேக சுகம், குடும்ப சுகம் என்பன தளர்வுறும். வருமானம் நன்றாக அமையாது. பெரியோருதவிகளும் பாராட்டுதல்களும் கிட்டும். செலவீனங்கள் அதிகரிக்கும். நினைத்த கருமங்கள் கைகூடாது. வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதில் தாமதம் காட்டும். குருபகவான் 25-1-86ல் 12-ம் இடத்துக்கு மாற்றமடைந்தபின் கஷ்டபலன்கள் மேலும் அதிகரிக்கும். எதிலும் மனத்திடமும், அவதானமும் அவசியம் தேவை.

குடும்பஸ்தர்களுக்கு குடும்பத்தில் நிம்மதி குன்றும். குடும்ப அங்கத்தவர்களால் பிரச்சினையுண்டாகலாம். புத்திரர் உதவி கிடைக்காது. வருமானமும் குன்றும். துக்க சம்பவங்களும் இடம்பெறும்

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராகவே இருக்கும். புதிய முதலீடுகளை ஆரம்பிப்பது நன்றல்ல: வங்கிநிலை வசதிகள் திருப்தியளிக்கும். பவுண், இயந்திரம், மருந்துவகை வியாபாரம் சிறப்புறும்.

உத்தியோகத்தர்கட்கு நற்பலன் உண்டு. மேலதிகாரிகளின் பாராட்டுக்களும், ஆதரவும் கிட்டும். பதவிஉயர்வும் சிறப்பும் உண்டாகும். சகஉத்தியோகத்தரின் ஒத்துழைப்பும் உரியநேரத்தில் கிடைக்கலாகும்.

விவசாயிகளுக்கு விளைவுகள் நன்மைபயக்காது. பயிர் உற்பத்தி பலிதமளிக்காது. அரசமானியம் உதவிகள்என்பன எதிர்பார்த்தமாதிரி அமையாது. விளைவுகளைச் சந்தைப்படுத்தலில் சிரமமேற்படும்.

தொழிலாளர்கட்கு வேலைவசதிகள் கிட்டும். எனினும் வேலைப்பழு அதிகமாகும். தொழிலாளர் மத்தியில் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் வேண்டும். நாட்கூலியாட்களுக்கும் வேலைவசதி குறைவுறும்.

மாணவர்களுக்கு கல்வித்தேர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உண்டாகும். சட்டத்துறை, கணிதத்துறை மாணவர் விசேட சித்தி கிடைக்கப்பெறுவர்.

பெண்களுக்கு இம்மாதம் சுமாராக இருக்கும்: காதல் விவகாரங்கள் களிப்பைத்தரும்; நினைத்தவை நினைத்தமாதிரி நடக்காவிடினும், பாதிப்பு ஏற்படா' குடும்பப் பெண்கள் திருப்தியடைவர்.

அதிஷ்டநாட்கள்; ஜன 15,16,23,24,25
பெப் 3,4,7,8,12

துரதிஷ்டநாட்கள் ஜன 27,28.
பெப் 1,2,9,10

# சோதிட பலன் ஏன் தவறுகின்றது?

சோதிடம் என்பது வேதத்தின் ஒரு அங்கமாகும். அதனை வேதத்தின் கண்போன்றதென்பர். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" அஃதுகணக்கே (ஒரு ஸ்தாபனத்திற்கு) நமது கண்ணுக்கு சமானமானது என்ற கருத்தை வலியுறுத்துகிறது. எண்ணும் எழுத்தும் சேர்வது கணிதமாகும். மனிதஉறுப்பில் கண்ணுக்கு தனிப் பெருமை உண்டு. வேறெந்த உறுப்பையும் வைத்து ஒரு சொல்வசனமாக அமைவதில்லை. இது கண்ணுக்குரிய விசேஷ சிறப்பாகும்.

உதாரணமாக கண்ணே! என்கிறோம். அதுபோல் மூக்கே, வாயே என்கிறோமா? நாம் கண்ணால் பார்க்கிறோம் காதல் கேட்கிறோம் வாயால் பேசுகிறோம், உண்கிறோம் என்கிறோம். ஆனால் கண்ணால் காண்கிறோம், கண்ணாரகண்ட சாட்சி வேண்டுமென்கிறார்கள். வாயால் வாய்கிறோமென்று கூறலாமா? இது கண்ணின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. இக்கண்ணும் உறுப்பாய்க் கருதப்பட்ட சோதிடமானது வேதத்தின் முக்கிய உறுப்பாகக் கொள்ளத்தகும். இச்சோதிடத்திலும் வேதாகமங்களிலும், பூலோகத் தேவர்களாம் பிராம்மணோத்தமர்களே சிறப்புறுவர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்வேதத்திற்கும்

ஆ. விநாயகமூர்த்தி – பருத்தித்துறை

சோதிடம் என்னும் கலையான சாஸ்திரத்திற்கும் மூலகர்த்தாவாகக் கருதப்படுபவர். சிருஷ்டிகர்த்தா பிரமதேவர் ஆயின்; அத்தேவரே படைப்புத் தொழிலும் சோதிடத்தொழிலும் செய்கிறார். என நாம் நம்புகிறோம். வேதம் ஓதும் பிரம்மாவானவர் ஓம் எனும் பிரணவத்தின் உட்பொருளை அறியாதவராய் முருகப்பெருமானிடம் தண்டனை பெற்றதாகப் புராணம் கூறுகிறது. முருகன் பிரணவத்தை தந்தைக்கு உபதேசித்த தகப்பன் சுவாமி, ஆனால் சிவமோ வேதத்தை உருவாக்கிய மூலப்பொருள். விநாயகர் வேதமே வடிவாயமைந்தவர். பிரணவமே அவர் உருவமாம். ஓம் எனும் மூலமந்திரமே விநாயகனின் வடிவமாகும்; அத்தெய்வத்தை ஆனைமுகன் என்கிறோம். அது விளங்காத் தனமாம், உண்மையில் வேதத்தின் வடிவம் இந்தப் பிள்ளையாரப்பனும். அவ்வாறு விநாயகப் பெருமானை நினைத்து அவன்துணையால் சோதிடக்கலை நுட்பங் கூறுவோர் வாக்குச் சித்தியுடையவராவர் என்பது நம் சமயமுன்னோர் நம்பிக்கையாம். அவர் துணையின்றி கூறும் சோதிட பலன் மாறுபடும்.

"வேதமத னேரங்கஞ் சோதிடத்தை
 வித்தகர்க ளியாற்றியதில் நுட்பராகி
சாதகமுங் கணித்துபல னெழுதிநல்ல
 சாதனைகள் செய்வரன்று மின்று மென்றும்
வேதமதன் வடிவமென வந்தமேலாம்
 விநாயகனே! நினைப்பணிந்துன் துணையாற்கூறு
சாதகமும் பொய்க்கும் பலன் பிழையா யாகும்
 சர்வசித்தி விநாயகனே யதற்குக் காப்பாம்"

மேற்குறிப்பிட்ட பாடலால் இக்கருத்துணர்க.

சோதிடமென்பதை சாஸ்திரம் எனவும் கூறுவர். இச்சாஸ்திரம் என்பது திரிகால ஞானமாகும். இக்கலையைப் பயில்வோர் தெய்வநம்பிக்கை மிக உடையவர்களாகவும்; ஆசாரசீலராகவும்; வாய்பேசாதவர்களாகவும்; பரிசுத்த மனமுடையோராகவும் இருத்தல் அவசியம். கபடமனதுடையோர், ஆசாரமற்றவர்கள், பொய்யர்கள் கூறும் சாஸ்திரம் உண்மையாகாது. உடற்சுத்தம், மனச்சுத்தம், இக்கலைக்கு வேண்டப்படுகிறது. இதலன்றோ பிராம்மணோத்தமர்கள் இதில் முன்னணி வகிக்கின்றனர்.

சாஸ்திரியார் என்றதும் குடுமித்தலையும், சமயதிட்சைக்குறியும் மங்கலப்பொட்டும், மேலங்கியற்ற தோற்றமும், கையிடுக்கிற் குடையும் கொண்ட ஞானவான் தோற்றமே நம் கண் முன் தோன்றும். இதுவே சோதிடர்க்குரிய தேசிய உடையாகும். தினமும் தெய்வ உபசரணையும், ஆன்ம ஈடேற்றம் கருதும் நினைவும், உள்ளதை உள்ளவாறு கூறும் மனோதிடமும், ஒரு சோதிடருக்கு வேண்டுவனவாகும்.

குலதெய்வத்தை மானசிக அபிஷேக பூசா தீபாராதனை செய்யும் மனப்பக்குவமும், யோகநிலையில் தெய்வ உபாசனை செய்யும் உள்ளமும் உள்ள ஒருவருக்கே அத்தெய்வ கடாட்சத்தால் நினைத்ததைக் கூறும் அருள்வாக்கும், கூறுதல் நிகழ்வும் ஏற்படும். அல்லது ஒரு துர்த்தேவதையை மாந்

திரீக பூஜா முறையால் வசியப்படுத்தி, அத்தேவதையின் அருள்கொண்டு கூறப்படுதல் வேண்டும். இவ்வாறு நினைத்தது கூறுதல், பலாபலன் கூறுதல் எங்கும் நிலவுகிறது. அவ்வாறு நினைத்தது கூறுதலிலும், பலாபலன் கூறுதலிலும், சோதிடம் கேட்போர் நம்பிக்கைவைத்து, அவ்வாறு கூறுவோர் பெருஞ்செல்வாக்குடன் பிரபல்யம் அடைதல் இன்றும் நடைமுறையிலுள்ளது. ஞானிகள் முனிவர்களால் இயற்றப்பட்டதே சோதிட நூல்கள். இம்முனிவர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்பது யாவருமறிந்ததே. ஸ்திரீபுருஷ சாமுத்திரிகாலக்ஷண விபரங்களை அறியக்கூடிய இம் முனிபுங்கவர்கள், கைரேகாபலன்களைக் கூறும் திறனும் உடையோராகவும், கிரக நிலையறிந்து கூறும் சோதிட நூல் வல்லோராயிருந்தும், ஒருவரைப் பார்த்த மாத்திரத்தே அன்னாரின் விபரங்கள் எதுவும் கேட்டறியாது ரேகாபலன் பார்க்காது கிரக பாவபலன் அறியாது அவரைப்பற்றிய விபரங்களையும், நிகழ்வுப் பலன்களையும் ஆச்சரியப் படத்தக்க வகையில் கூறுவார்கள் என்பது சோதிடப்புத்தகங்களின் முன்னுரையில் இடம் பெறும் வாக்கியமாயமைகிறது. இது யாரும் மறுக்க முடியாத உண்மைக் கூற்றாகும். இதிவ்வாறிருக்க சோதிடபலன் ஏன் தவறுகிறது? என வினாஎழுப்பி நீண்ட கட்டுரை பலர் வரைகின்றனர். இக்கருத்தை இதுவரை யாரும் கூறியதாகத் தெரியவில்லை.

இதிலிருந்து நாம் அறியக்கூடிய கருத்துக்கள்

1: சோதிடத்தை கணிதசுத்தமாக கணித்து பாகை, கலை, கிரகஸ்புடம், கிரகாவஸ்தை, கிரகசமயம், சுபர், பாபர், கிரகபலம், பாவநிலை தெசாபுத்தி விபரங்களை நுணுக்கமாக ஆராய்ந்து பலாபலன் கூறுதல் இதுஒருவகை.

2: தெய்வசகாயத்தால் மேலோட்டமாக கிரக பலாபலன்களையறிந்து ஏதாவது ஒரு தெய்வத்தை மானசீக வழிபாடுசெய்து; அத்தெய்வ உபாசனை செய்து (தியானம்) அத்தெய்வத்தின் அருட்சக்தி கைவரப்பெற்று, அத்தெய்வத்தின் வாக்காய் கற்பனைசெய்து, அத்தெய்வத்தின் நினைவேயன்றி வேறொன்றறியா நிலையில், அருட்சக்தியும் சித்தியும் கைவரப்பெற்று, தெய்வவாக்காகக் கூறப்படுவது ஒருவகை. முன்னையதற்கு அதிக ஆராய்ச்சியும் புத்திநுட்பமும் கூடிய சோதிடக்கல்வி அறிவும் அவசியம். பின்னையதிற்கு தெய்வஅருள் ஒன்றே போதும். இக்கருத்தை சோதிடர் எவரும் மறுப்பரோ? பின் கூறப்பட்ட வழியில் பலாபலன் கூறுவோர் முதற்கூறிய முறையிலும் பிரபலமடைவர் என எதிர்பார்க்கலாம். அம்முறைக்கு அதிகமாகத் தெய்வஉபாசனை வேண்டும். நம் சமய நோக்கமஃதே. சோதிடக்கலைக்கும் நம்சமய நெறிக்கும் நெருங்கிய தொடர்புண்டென்பதை மறந்து வெறும் கிரகபாவ ஆதிபத்திய பலன்களை விமர்சித்தல் நம்து சமயத்தையும், தெய்வங்களையும் மறப்பதற்குச் சமானமாகும். எனவே தற்கால சோதிடர்களே! நீங்கள் உண்மைச் சோதிடர்கள் என நினைப்பின் தெய்வசிந்தனையை மறவாதீர்கள். ''அவன்அருளாலே அவன்தாள் வணங்கி சிந்தைமகிழ்ந்து சோதிடங்கற்பீர். அவன் அருளாலே சோதிடபலனை அணுவும் பிசகாதுரைப்பீர் நன்றாய்!

---

# மகர லக்ன ஆணும் மிதுன லக்ன பெண்ணும்

## சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை - நல்லூர்

மாறுபட்ட குணாதிசயமுடைய இருவரை இணைப்பது கஷ்டமெனினும் இருவரும் ஒருவருக்கொருவர் பூர்த்திசெய்யக்கூடியவராவர். மகரகாரர் ஒதுங்கி வாழ்பவர், எதையும் பாரதூரமாகக் கருதுபவர். செயற்திறமுள்ளவர், தன்னுடைய தொழிலில் மிகவும் வற்புறுத்துள்ளவர். அவனுடைய தொழிலில் அவளும் ஊக்கங்கொண்டால் அவள் புத்திசாலியாவாள். அவனுடைய பேராவல்களில் தானும் பங்குகொள்ளாமலிருப்பாளானால் அவனுடைய முக்கிய வாழ்வில் அவள் தன்னைத்தானே தள்ளிவைப்பவளாவாள். மிதுனகாரி இயற்கையாக கதைகாரியானாலும் அவனுடைய பிரச்சினைகளை உற்றுக்கேட்க வலியவேண்டும். அப்போது அவனுக்குள் எழும்பும் பிகுத் தன்மைகள் கொஞ்சம் இலேசாகும். இப்படிப் பட்ட விளக்கத்திற்கு கைமாறாக அவளுக்குள் இடையப்பட்டுக்கொண்டிருக்கும் அமைதியின்மையை அவள் கொந்தளிப்பில்லாமல் செய்வான். தனக்காகவே இசைந்த வாழ்வை அவள் அமைக்க அவன் முழுக்கச் சம்மதிப்பான். அவளுடைய வாழ்வில் அவள் தழுவும் கலை ஊக்கங்களில் அவனும் கலந்துகொள்வான்.

வருங்காலத்தைப் பற்றி யோசித்து அதற்கு சேமிப்பதில் மகரகாரர் நாட்டங்கொள்வார். மிதுனகாரி தற்போதைய பொருளாதார நிலையை

[21-ம் பக்கம் பார்க்க]

# வியாழ மாற்றம் நன்மை அளிக்குமா?

சூரிய மண்டலத்திலுள்ள கிரகங்களுள் மிகப் பெரிய கிரகமான வியாழபகவான் நிகழும் குரோதன வருஷம் தைமாதம் 12-ம் நாள் (25-1-1986) சனிக்கிழமை காலை 6 மணியளவில் மகரராசியில் இருந்து கும்பராசிக்கு பிரவேசிக்கின்றார். ஒருவருடகாலத்தில் நமக்குத் துன்பங்களைக் களைந்து, தெய்வானுகூலம், மங்கலகாரியங்கள், பொன், பொருள் சேர்க்கை, நல்வாழ்வு, தாரபுத்திரசுகம் முதலிய நற்பலன்களைத் தந்து வாழ்க்கை சிறப்படைய குருபகவானைப் பிரார்த்திப்போமாக.

**உலகபலாபலன்**

உலகெங்கும் பொதுவாக அபிப்பிராயபேதங்களும், யுத்தபீதியும் உண்டாகும். வல்லரசு நாடுகளில் பரஸ்பர விரோதங்கள், அமைதியின்மை காணும். மத்தியகிழக்கு நாடுகளில் தொடர்ந்தும் யுத்த அபாயம் இருக்கும். ஆபிரிக்க நாடுகளில் திடீர்புரட்சி, அரசியல் மாற்றம் என்பன ஏற்படலாகும், இந்திய அரசியல் நிலைமைகளில் தொழில் நுட்பம், கைத்தொழில் அபிவிருத்தி என்பன ஏற்படினும் அரசியல் தலைவர்களுக்கு கஷ்டமுண்டு. பல நாடுகளில் உள்நாட்டுக் கிளர்ச்சிகளும், அடக்குமுறைகளும், நியாய விரோதமான மனிதாபிமானமற்ற செயல்களும் ஏற்படலாகும்.

**இலங்கை**

இலங்கையின் லக்கினமான கும்பலக்கினத்தில் வியாழன் பிரவேசிக்கிறார். பொதுவாக ஜன்ம வியாழன் பலவித கஷ்டங்களை கொடுக்கக்கூடியது. லக்கினாதிபன் சனி 10-ம் இடத்திலிருப்பினும், செவ்வாய், யுரேனஸ் இவற்றுடன் சம்பந்தப்படும்போது அரசியல் நிலையில் பல கொந்தளிப்புகளையும், சச்சரவுகளையும் உண்டுபண்ணும். அரசியல் உயர்பதவி வகிப்போருக்கு நன்றல்ல. பிடித்ததைச் சாதிப்பதேயொழிய விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை குறைந்துகாணும். பொருட்களின் விலை அதிகரிக்கும். தொழில் வளங்கள் பெருகும். அரசியற் தலைவர்களுக்குள் அதிகாரப் போட்டி, கருத்துவேறுபாடுகள் நிலவும்.

தமிழர்களின் லக்கினமான மேடத்துக்கு 9, 12-ம் அதிபதியாகிய வியாழன் 11-ம் வீட்டில் தாம்ரமூர்த்தியாகச் சஞ்சரிக்கின்றார். இதனால் தமிழ் மக்களுக்கு முன்பிருந்த கஷ்டங்கள் சற்றுக் குறைய இடமுண்டு. மக்களிடையே ஒற்றுமை வலுவடையும். வெளிநாட்டு உதவிகளும் கிட்டும். நாட்டு நலனில் அக்கறைகொள்வர். பொருளாதாரம் விருத்திபெறும். தொழில்வளம் சிறக்கும். எனினும் 8-ம் வீட்டில் சனி, செவ்வாய், யுரேனஸ் சேர்ந்திருப்பதால் எதிர்பாராத இழப்புகள் கஷ்டங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும்.

இராசிரீதியில் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் நடைபெறும் பலாபலன்களை ஆராய்வோம்.

### மேடம்

இவ்விராசியினர்க்கு வியாழபகவான் தாம்ர மூர்த்தியாக 11-ம் ராசியில் சஞ்சரிப்பார். மூர்த்தி பலம் குன்றினும் ஸ்தானபலம் நன்றாக இருப்பதால் நற்பலன்களை எதிர்பார்க்கலாம். தொழில் முயற்சியால் லாபங்கள் உண்டாகும். எண்ணிய கருமங்கள் மிக எளிதாக அனுகூலமாகும். புதுத் தொழில்கள் ஆரம்பிக்க நன்று. தொழிலற்றிருப்போர்க்கு தொழில் வாய்ப்புகள் கிட்டும். தேக சுகம் சிறப்பாக இருக்கும். வீட்டில் மங்கலகருமங்கள் நிகழ இடமுண்டு. உத்தியோகத்துறையினர்க்கு வசதியான இடமாற்றமும், உயர்ச்சியும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வித்துறை சிறப்பாக இருக்கும். அட்டமத்துச்சனியின் சஞ்சாரமும் இருப்பதால் எதிலும் அவதானம் வேண்டும்.

### இடபம்

இவர்களுக்கு வியாழன் ரஜதமூர்த்தியாகி 10-ம் வீட்டில் வலம் வருவார். ''பத்தாம் இடத்தில் குரு பதியைவிட்டுக் கிளப்பும்'' என்றோர் முதுமொழி உண்டு, எனவே இவர்களுக்கு வேலைப்பழு, இடமாற்றம், அலைச்சல், பிரயாசை என்பன இடம்பெறலாகும். எண்ணியவை எண்ணியாங்கு நடைபெறாது வரவிலும் பார்க்க செலவு முன்னிற்கும். தேகசுகம் பாதிக்கப்படும். உத்தியோகத்துறையினருக்கு கஷ்டப்பிரதேச இடமாற்றம், மேலதிகாரிகளின் பழிச்சொல்லுக்கு ஆளாகுதல் என்பன நிகழும். கறுப்பு மார்க்கட் வியாபாரம் செய்வோர் அவதானமாக இருக்கவேண்டும். மாணவர்களுக்கு கல்வியில் சமபலன் உண்டாகும்.

## மிதுனம்

இந்த இராசியில் ஜனனமானேருக்கு குருபக வான் சுவர்ணமூர்த்தியாகி 9-ம் இராசியில் சஞ் சரிப்பது மிகுந்த சிறப்பாகும். தொழில் முறை களில் நல்ல முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். உத்தியோகத்துறையில் உள்ளோர்க்கு வசதியான இடமாற்றம் கிட்டும். பணவருவாய் நன்ருகவிருக் கும். பிதாவழியால் நன்மையுண்டு. தேக சுகம் குடும்பசுகம் சிறப்பாக அமையும். விவாகமாகா தோருக்கு மங்கலவாழ்வு கிட்டும். வியாபாரத் துறையிலீடுபட்டோர் அபரிமிதமான லாபங்காண் பர். கடன் தொல்லைகள் நீங்கும். புத்திரர் இல் லாதோர்க்கு புத்திரபாக்கியம் உண்டாகும். விவ சாயத்துறையில் ஈடுபாடுஉடையோர் அதிகமுன் னேற்றம் காண்பர். மாணவர்கள் பரீட்சையில் சித்தி பாராட்டு என்பன பெறுவர்.

## கடகம்

கடகராசிக்காரருக்கு வியாழன் 8-ம் ராசியில் லோகமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வது பலவகை யிலும் பாதிப்பான பலன்களையே காட்டுகிறது. ஸ்தான பலத்துடன் மூர்த்திபலமும் குன்றியிருப் பதால் கஷ்டபலன்களே அதிகம் நிகழும். தொழில் விருத்தியின்மை, அதிகபிரயாஸை, முயற்சிக்கேற்ற பலன் கிட்டாமை என்பன ஏற்படலாகும். முன்பு செய்த முதலீடுகளும் நட்டத்தையே தோற்று விக்கும். வாகனம் வைத்திருப்போர் விபத்துக்கள் பற்றி அவதானமாக இருத்தல் வேண்டும். தேக சுகம், குடும்பசுகம் என்பன பாதிக்கப்படும். விவா கமாகாதோருக்கு விவாகப்பலன் கைகூடாது. உத் தியோகத்துறையினர் பல சிக்கல்களுக்குள் கரும் மாற்றவேண்டும். மாணவர்க்கு போட்டி, பரீட்சை என்பவற்றில் சித்தியின்மையையே காட்டுகிறது.

## சிங்கம்

இவர்களுக்கு குருபகவான் 7-ம் இடத்தில் சுவர்ணமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கின்ருர். மூர்த்திபலமும், ஸ்தானபலமும் நன்ருக இருப்பத ஞல் பொருள்லாபம், காரியசித்தி, புத்திக்கூர்மை, வாகனசுகம் போன்ற நற்பலன்கள் ஏற்பட இட முண்டு. முன்பிருந்த கடன்தொல்லைகள் நீங்கி வருவாய் அதிகரிக்கும். புதிய முதலீடுகள் ஆரம் பிக்கவும் நன்று. உத்தியோகத்துறை, வியாபாரத் துறையில் ஈடுபட்டோர் லாபமடைவர். விவாக மாகாதோருக்கு விவாகப் பலன் உண்டு. கணவன் மனைவியுறவு திருப்திகரமாக இருக்கும். இவ் வாண்டு பல நன்மைகளை அனுபவிக்கும் ஆண் டாக அமையும். மாணவர்களுக்கு முன்னேற்றகர மானதாகும்.

## கன்னி

இந்த இராசியில் ஜனனமானேருக்கு வியா ழன் தாம்ரமூர்த்தியாக 6-ம் வீட்டில் சஞ்சரிக்கின் ருர். ஸ்தானபலமும், மூர்த்திபலமும் குன்றியிருப் பதனல் பொதுவாக எவ்விஷயத்திலும் மந்தக தியே இருக்கும். தொழில் விடயங்களில் சிறுசிறு தடங்கல்கள் தோன்றும். பொருளாதாரம் ஓரளவு திருப்தியளிக்கும். குடும்பசுகம் சிறப்பாக இராது. வெளிநாட்டுப் பிரயாணங்கள் நன்மையளிக்காது. இரகசிய சத்துருக்களைப்பற்றி அவதானமாக இருக்கவும். புத்திரரால் துர்ப்பலன்களே நிகழும். உத்தியோகத்துறையிலிருப்பவர்கட்கு மேலதிகாரி களுடன் கருத்துவேறுபாடுகள் தோன்றும். மாண வர்களுக்கு முயற்சிக்கேற்ற லாபம் கிடைப்பது கஷ்டம்.

## துலாம்

துலாராசியினர்க்கு குருபகவான் ராஜதமூர்த் தியாக 5-ம் வீட்டில் சஞ்சாரம் செய்வது நன்ரு கும். மூர்த்திபலம், ஸ்தானபெலம் இரண்டும் சிறப்படைவது நன்றெனினும், ஏழரைச்சனியின் கடைக்கூறும் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் நன்மை, தீமை கலந்த பலன்களே நிகழும். தொழில்துறையிலும், குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும். புதிய தொழில்கள் ஆரம்பிக்கவும், மூத வீடு செய்யவும் நன்று. கடன் தொல்லைகள் இழுப நியிலேயே இருக்கும். உத்தியோகத்திலிருப்பவர் கட்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைப்பி னும், வேலைப்பழு அதிகமாக இருக்கும். விவாக மாகாதோர்க்கு விவாகப்பலன் உண்டு. மாணவர் கட்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படினும், பரீட்சை நேரங்களில் தடைதாமதங்களை எதிர் நோக்க நேரிடும்.

## விருச்சிகம்

இவர்கட்கு வியாழன் லோகமூர்த்தியாகி 4-ம் ராசியில் சஞ்சாரம் செய்கின்ருர். மூர்த்திபலம் குன்றியிருப்பதுடன், ஏழரைச் சனியின் நடுக்கூறும் நடைபெற்றுக் கொண்டிருப்பதனல் இவர்களுக்கு கஷ்டமான பலனே அதிகம் நிகழும், தொடங் குங் கருமங்கள் அதிக பிரயாசையின்மேல் அனுகூல மாகும். எக்காரியத்திலும் அலைச்சல் கூடுதலாக இருக்கும். செலவீனங்கள் கட்டுக்கடங்காமலிருக் கும். உறவினரால் பகை, விரோதம் உண்டாகும். உத்தியோகத்திலும், பொறுப்பான பதவிகளிலும்

இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மேலும் அதிகரிக்கும். விவாகமாகாதோர்க்கு விவாகப்பலன் தாமாக தமாகவே கிட்டும். மாணவர்கட்கு கல்வி முயற்சிகள் பலிதமளிக்காது.

### தனுசு

தனுராசியினர்க்கு குரு 3-ம் வீட்டில் தாம்ர மூர்த்தியாகச் சஞ்சரிப்பதும், ஏழரைச்சனியின் முற்கூறும் நற்பலன்களைக் கொடுக்க ஏதுவாக இல்லை. "3-ல் குரு துரியோதனன் படை மாண்டது" என்று ஓர் வாசகமுண்டு. தொடங்குங் கருமங்கள் சிக்கல்களைக் கொடுக்கும், தேகசுகம் பாதிக்கப்படும். புதிய தொழில் ஆரம்பித்தல், முதலீடு செய்தல் என்பவற்றை பிற்போடுதல் நன்று. உத்தியோகத்துறையில் இருப்பவர்கட்கு வேலைக்கஷ்டமும் வசதியற்ற இடமாற்றமும் ஏற்படும். மணமாகாதோர்க்கு மணவாழ்க்கை தாமதமாகும். கடன் கொடுத்தால் மீளப்பெறுவது கஷ்டம், வியாழக்கிழமை விரதம் நன்மைதரும்,

### மகரம்

இந்த இராசியினருக்கு வியாழன் சுவர்ண மூர்த்தியாகி 2-ம் வீட்டில் பிரவேசிக்கின்றார். சனியும் 11-ல் சஞ்சரிக்கிறது, மூர்த்திபலம், ஸ்தானபலம், சனிசஞ்சாரம் யாவும் நன்றாக அமைவதினால் இவர்களுக்கு இவ்வாண்டு மிகச் சிறந்த நற்பலன்கள் நிகழலாகும். தொழில் முயற்சிகள் எதிர்பாராத லாபம் தரும். எண்ணியவை எண்ணியாங்கு நடைபெறும். புதுத் தொழில்கள் ஆரம்பிக்கவும், முதலீடு செய்யவும் உகந்தகாலம். தேகசுகம், குடும்பசுகம் மகிழ்ச்சி தரும். விவாகமாகாதோருக்கு விவாகப்பலன் உண்டு. உத்தியோகத்துறையினருக்கு வசதியான இடமாற்றங்கள் ஏற்படும். நிதிநிலைமைகள் சிறப்படையும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம், பரீட்சைகளிற் சித்தி என்பன கிட்டும்.

### கும்பம்

கும்பராசியினர்க்கு குருபகவான் ரஜதமூர்த்தியாகி ஜன்மராசியில் பவனிவருகிறார். "ஜன்மராசிக் குரு இராமர் வனவாசம்" என்று சொல்வார்கள். எனவே பலவகையிலும் பிரச்சினை நிறைந்ததாகவே காணப்படுகின்றது. தொடங்குங் கருமங்கள் அதிக அலைச்சல் பிரயாசையின் மேலேயே நடக்கும். தொழிற்துறைகளில் கஷ்டபலன் தென்படும். உடல்நலம் குன்றும். குடும்ப நலனில் அதிக அக்கறை வேண்டும். எக்காரியத்திலும் வெற்றி கிட்டுவது கஷ்டம். தொழிலாளர்களிடையே போட்டி உருவாகும். விவாகம் ஆகாதவர்களுக்கு விவாகப்பலன் தாமதத்தையே காட்டுகின்றது. மாணவர்களுக்கு கல்வியில் நற்பலன்களைத் தரக்கூடியதாக இல்லை.

### மீனம்

இவர்களுக்கு வியாழன் லக்கினாதிபதியாகி 12-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மூர்த்திபலமும், ஸ்தானபலமும் குன்றியிருப்பதனால் நற்பலன்களுக்கு ஏதுவாக இல்லை. தேகசுகம் பாதிப்படையும். பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி குன்றும். தொழிற்துறையில் பலவித சிக்கல்கள் ஏற்படலாகும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. கணவன், மனைவி உறவு விரிசலடையும். மன நிம்மதி குன்றும். உத்தியோகத்தர்களுக்கு கஷ்டப்பிரதேச இடமாற்றம் ஏற்படலாகும். விவாகமாகாதோர்க்கு விவாக முயற்சிகள் பயன் தராது. வரவிலும் பார்க்கச் செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதி குன்றும். மாணவர்களுக்கு கல்வியில் நற்பலன்கள் நிகழ இடமில்லை. விடாமுயற்சி அவசியம் வேண்டும். இவ்விராசியினர் வியாழக்கிழமை விரதமனுஷ்டித்து தட்சிணாமூர்த்தியைப் பிரார்த்தித்தல் நன்று.

---

மகர லக்ன ஆணும்...... (18-ம் பக்கத் தொடர்) மட்டும் கவனிப்பாள். அதற்குமேற்கொண்டு ஒன்றும் நினைக்கமாட்டாள். ஒப்புக்கொள்ளக்கூடிய அடிப்படை வித்தியாசங்கள்தான் இவை. இதை வெற்றிகொள்ளவேண்டுமெனில் கூடுதலான அன்பு உண்டாகவேண்டும்.

தனது தொழிலில் வைத்திருக்கும் நாட்டத்தை அவன் மனதிருந்து அவள் மாற்றினால் பாலியலாக இப்பிணைப்பு சாதகமாகவிருக்கும். இப்படிச் செய்வதற்கு அவளுக்கு எவ்வளவோ பெரிய மனசு வேண்டும். ஆனால் இது தனக்கு இழுக்கென்று அவள் நினைப்பாள். பெண்ணிடம் ஆண் அக்கறை கொள்ளும்வண்ணம் நிலைமையை ஆக்குதல் அவளுக்கு முழுதும் அந்நியமான செயலாகும். ஏனெனில் முன்பு அப்படிச்செய்து அனுபவமில்லை. படுக்கையில் தனக்கருகே படுத்துக்கொண்டு தன்னுடை பிரச்சனையில் மூழ்கிக்கொண்டிருப்பானேல் அவளைப் பொருட்படுத்தாது அவளுடைய நான் என்னும் செருக்கு வருந்தும். அதனால் அவள் தன் பெண் கவர்ச்சியை பிறிதொருவரிடம் காட்ட முற்படுவாள். இதில் சம்பந்தப்பட்டவர்களின் மிக கடும் உழைப்பினால் தான் பிணைக்கப்படலாம்.

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## எண் - 9 செவ்வாய்

### பிறந்த திகதிப் பலன்

**9-ம் திகதி** தற்காலிகமாகப் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவர், நிரந்தரத் தீர்வு பின்னர் என்பர். வாக்குச் சாதுரியத்தால் ஏமாற்றிடுவர். தமது இலட்சியத்திற்காக போராடுவர். தம் சுதந்திரமே இவர்களுக்கு பெரிதாகத் தெரியும் எல்லோரும் தமக்கு அடங்கி நடக்க வேண்டும், எனக் கருதுவர். குடும்பத்தில் இனஜனங்களால் சச்சரவுகளிருக்கும். பிள்ளைக ளிடத்தில்மிகுந்த பாசமிருக்கும். காதலால் பல தொல்லைகள் ஏற்படும். பணத்தை செலவழிப்பதிலே பலே பேர்வழிகள். 40 வயதிற்குப்பின் ஒரு நிலையானதன்மை ஏற்படும்.

**18-ம் திகதி** குடும்பப் பொறுப்பு அதிகம். இவரின் உழைப்பைப் பறிக்க சிலர் காத்திருப்பர். வழிவிபத்து, நீர், நெருப்பு, வெடி, புயல், மின்னல் போன்றவற்றால் ஆபத்து முறிவு என்பன ஏற்படும். பலமுறை யோசித்து எந்த முடிவையும் எடுக்கவும். தீயோர் சேர்கையால் பொருள், காணி, பூமி, பறி போகும். நாட்டிற்காக அல்லது வீட்டிற்காக உரிமைபெற எதிராளியுடன் துணிவுடன் போராடுவர். பலத்த போராட்டத்தின் பின் உயர் பதவி அந்தஸ்து கிடைக்கும். இனஜன விரோதங்கள் மாறி மாறி ஏற்படும். பொதுச்சேவை செய்வோர் அவதானமாக இருக்கவும். சிலர் சிரித்து சிரித்து பேசி இவர்களை ஆபத்தில் மாட்டிவிடுவர்.

**27-ம் திகதி** பட்டம், பதவி, பணம் படிப்படியாக அதிகரிக்கும். அறிவாற்றல் அனுபவம் மிகுந்த எண் ஆகும். அரசாங்க ஆதிக்கம் உதவிகள் கிடைக்கும். எதையும் கண்டு பிடிக்கும் ஆற்றல் ஏற்படும். ''தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' என்ற வாக்கு இவர்களுக்கு மிகமிகப் பொருந்தும்; தமது சொந்தப் புத்தியின்படி செயற்பட்டால் எடுக்கும் எக்காரியங்களிலும் வெற்றி ஏற்படும் எல்லோரும் உதவி செய்வர்.

### (ஆ) கூட்டு ஒற்றை எண் — 9

திகதி மாதம் வருஷம் மூன்றையும் கூட்டி வரும் மொத்த எண்ணின் ஒற்றை எண் பலனையும் இப்பகுதியில் ஒருவர் அறிந்து கொள்ளலாம். (ஒருவரின் கூட்டு எண், பெயர் எண்ணே அவ்ரின் இயக்கம் வளர்ச்சிக்குக் காரணமாகும்)

**9 எண்ணை கூட்டு ஒற்றை எண்ணாக உடையவர்கள்.**

உடல் மனோசக்தி மிக்கவர்கள். வயது ஏற ஏற பொருள் சுகபோகங்கள் வசதிகள் ஏற்படும். மூடநம்பிக்கையை எதிர்ப்பர். ஆனால் தெய்வ நம்பிக்கை மிகுந்தவர்கள். பொதுநலத் தொண்டால் புகழ்பரவும். பிடிவாதக் குணமிக்கவர்கள். உடல் உணர்வு அதிகம் உள்ளவர்கள். சிறு சம்பவத்தாலும் மனத்தாக்கம் ஏற்பட்டுவிடும். திடீரென உணர்ச்சிவசப்பட்டு மேல் கீழ் நிலைகளை அடைவார்கள். திரும்பத் திரும்ப போராடியபடி இருப்பார்கள். நம்பிக்கைக்கு பாத்திரமான நண்பர்கள். மற்றவர் செய்யும் நன்மை தீமைகளை உயிருள்ளவரை எத்தனை வருஷங்களாயினும் மறக்கமாட்டார்கள். தம்மை எதிர்ப்பவர்களை அவர்களின் தகுதிக்குத் தகுந்தால் போல் மதிப்புக் கொடுத்து எதிர்ப்பார்கள். அடித்து அணைப்பார்கள். அணைத்து அடிப்பார்கள்; பிறருக்கு விடுதலை தேடிக் கொடுப்பார்கள். உடலாலும், மனத்தாலும் மற்றவர்களின் வேதனை, சோதனைகளை நீக்குவதற்கு தக்க ஆலோசனைகளையும், உதவிகளையும் செய்வார்கள். தொழில் விசயத்தில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதமாக தமது செயல் கொள்கைகளை மாற்றி தாம் நினைத்தவற்றைச் சாதிப்பர். இவரை எவரும் வஞ்சித்தால் காத்திருந்து

கழுத்தறுத்து விடுவார்கள். ஜனவசீகரம் உடைய வர்கள். தலைமைப்பதவி தேடி ஓடிவிடும். ஒரு காலத்தில் இவரைக் கேலி செய்தவர்கள் பின்பு இவர்களிடம் உதவிக்கு வருவார்கள்.

தொழில்: தொழிலில் எந்நேரமும் ஊக்கம் இருக்கும். பொறியியல் அரசியல், பொதுநலத் தொண்டு, சமயம், போர்ப்படை என்பவற்றில் ஈடுபடலாம். ஆபிரேசன் செய்யும் டாக்டர்கள் மருந்து தொடர்பான தொழில் செய்வோர் நாட்டை ஆளும் தகுதி படைத்தவர்கள். விவசாயம், அளவைத்தொழில், படவரைஞர்கள், மரம், நெருப்பு, உரவகை தொடர்பான தொழில் செய்வோர் இவ்வெண்ணில் இருக்கின்றனர்கள். 9ம் எண்ணைக் கூட்டு எண்ணாக உடையவர்கள் ஆக்கம் அல்லது அழிவுத் தொழிலைச் செய்பவர்களாக செயற்படுகின்றனர்கள். மேடம் அல்லது விருச்சிக இராசி, இலக்கினத்தில் பிறந்தவர்கள் வைத்தியத்துறை, கலைத்துறை, விவசாயத்துறை என்பவற்றில் தொடர்புடையவர்களாக இருப்பின் செல்வமும், செல்வாக்கும் அடைவார்கள்.

நோய்: உஷ்ண ரோகங்கள் (காச்சல், அம்மை) தலை சம்பந்தமான தலையிடி, கண்வருத்தம், பல்வலி என்பன ஏற்பட இடமுண்டு. வாய் வாதரோகங்கள் மூலம், வயிறு பாதிக்கப்படும். இரத்தசம்பந்தமான இரத்த அழுத்தம் சூட்டுக்காயம், வெட்டுக் காயம், வெடிவிபத்து, வாகன விபத்து, விழுந்து எலும்பு முறிவு என்பன ஆதிக்கப்பலன் உள்ளவர்களுக்கு அடிக்கடி ஏற்பட இடமுண்டு. இவர்களுக்கு அடிக்கடி சூட்டினால் உடம்பு பாதித்து பல நோய்கள் ஏற்படச் செய்யும். சீதோஷ்ண நிலையில் மாறுதல்கள் ஏற்படும் பொழுது உடல்நிலை பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவும்.

உணவு: கீரைவகை,பழவகை அதிகமாக உட்கொள்ளவும். நல்லெண்ணை பாவிப்பதனால் உடல்சூடு தணியும். உள்ளி, வெங்காயம் வெண்டிக்காய் பாவிக்கலாம். பேரீச்சம்பழம் சாப்பிடுவதால் இரத்த அழுத்தம் குறையும். (இரத்த சம்பந்தமான நோய்கள் உள்ளவர்கள் பேரீச்சம்பழம் அதிகம் சாப்பிடவும்) கார உணவுகளை விரும்பிச் சாப்பிடுவார்கள். மிளகு, மிளகாய், கறுவா, என்பவற்றை ஓரளவு குறைத்துக் கொள்ளவும். இஞ்சிக்கிழங்கு சேர்க்கலாம். விதிவிலக்கு மரவள்ளிக் கிழங்குடன் இஞ்சிக்கிழங்கைச் சேர்க்கக் கூடாது.

(வளரும்)

# இலங்கை சோதிட ஆய்வுமன்றம்

மேற்படி சங்கத்தின் மார்கழிமாதக் கூட்டம் 29-12-85ல் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் ஆரம்பமானது. தலைவர் தமது தலைமையுரையில் சென்ற கூட்டத்தில் தமிழ் எழுத்துக்களின் எண்கள் என்ற விஷயத்தைப் பற்றிப் பேசிய எண் சோதிடர் திருவாளர் மு. மு. மார்க்கண்டு எண் சோதிடத்தில் ஆற்றிய ஆக்கபூர்வமான ஆராய்ச்சிகளை வியந்து விமர்சனம் செய்தார். அக்கட்டுரை அடுத்த சோதிடமலரில் வெளியிடப்படும்.

பின்னர் திரு. நா. கந்தசாமி ஐயர் கேலி வால் வெள்ளியின் வானியல் தோற்றம் பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தினர். அதன் தோற்றப் படத்தை சபையோருக்கு விநியோகித்து தக்க ஆதாரங்கள் காட்டி விளக்கினர். பின்னர் வே. சின்னத்துரை கேலி வால்வெள்ளி தோற்றுவதால் ஏற்படும் பலாபலன்களைப் பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தினர். பொதுவாக அது தோற்றுவதால் பெரும் தீங்குகள் மக்களுக்கு உண்டாகுமென்றும் இந்திய இலங்கை அரசியல்வாதிகளைப் பாதிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

பின்னர் திரு. ந. கந்தசாமி ஐயர் தமது சுகவீனம் காரணமாக செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதற்கு அறிவித்தல் கொடுத்ததும் சபை அதனை ஏற்றுக்கொண்டது. பின்னர் மன்றத் தலைவர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயருக்கு யாழ் பல்கலைக் கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கியதைக் கௌரவிக்கும் முகமாக அவருக்கு ஓர் வரவேற்புபசாரம் வைப்பதற்கு சபை ஏகமனதாகத் தீர்மானித்தது. பின்னர் மாலை ஐந்து மணியளவில் கூட்டம் இனிது நிறைவேறியது.

## உங்களுக்குத் தெரியுமா?

இன்ன இன்ன மாதங்களில் புதுவீட்டிற்குக் குடிபுகக் கூடாது என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவை என்ன மாதங்கள் என்ன காரணம் என்று தெரியுமா?

| | |
|---|---|
| இராவணன் மாண்டமாதம் | — ஆடி |
| பாரதப்போர் நிகழ்ந்த மாதம் | — மார்கழி |
| இரணிய சம்ஹாரம் நடந்தமாதம் | — புரட்டாதி |
| சிவன் நஞ்சுண்ட மாதம் | — மாசி |
| காமன் எரிந்த மாதம் | — பங்குனி |
| மகாபலிச் சக்கரவர்த்தி பூமிக்குள் அழுந்திய மாதம் | — ஆனி |

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 43

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-2-1986க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 43
சோதிடமலர்

மட்டுவில் .... சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா 1 | 2 | 3 | யோ 4 | 5 | 6 |
| 7 | 8 | ர 9 | 10 | ஞ் 11 | 12 |
| 13 | ■ | 15 | ச 16 | ப 17 | த 18 |
| ம் 19 | 20 | ■ | 22 | சா 23 | 24 |
| ■ | 26 | 27 | ன 28 | 29 | ■ |
| 31 | ர 32 | 33 | ■ | 35 | ■ |

பெயர் ..........................................................

விலாசம் ..........................................................

..........................................................

**இடமிருந்து வலம்:**

1. சுக்கிரன் ஆட்சி அல்லது உச்சம் பெற்றுக் கேந்திரத்திலிருப்பதினுல் ஏற்படும் யோகம் இது.

7. பட்டுப் புடவைக்குப் பெயர்பெற்ற இடம் ஒளிந்துள்ளது.

15. ஓர் கருமத்தைச் செய்வதாக தெய்வத்தின் மீது ஆணையாகி சூளுரைத்தலை குழம்பியுள்ள இச் சொல்லால் அழைப்பர்.

19. நட்சத்திரமொன்று வலமிடமாகி நடு எழுத்து விடுபட்டுள்ளது.

22. கிரகங்களின் நிலைகளை இவ்வாறும் அழைப்பர். குழம்பிவிட்டது.

26. யோகமொன்று மறைந்திருக்கிறது.

31. இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் ஆகியன ......ராசி வகையைச் சார்ந்தன. குழம்பிவிட்டது.

**மேலிருந்து கீழ்:**

1. இறந்தோரைக் குறித்து மாதந்தோறும் செய்யப்படும் கிரியை இது.

2. இராகத்தைப் போல் சங்கீதத்திற்கு முக்கியமானது இது. முதலெழுத்தின்றியுள்ளது.

3. வருடச் சக்கரத்தின் முதல் வருடம் முதலெழுத்தின்றி குழம்பியுள்ளது.

4. உடலாரோக்கியத்தை பேணும் ஓர் வகைத் தேகாப்பியாசம் இறுதி இரு எழுத்துக்கள் இடம் மாறி அமைந்துள்ளது.

5. கிரகநிலைகள், விரதாதிகள் ஆகியவற்றை வருடாந்தம் அறியத்தருவது இது. குழம்பியுள்ளது.

6. ஒழுங்கற்றிருக்கும் இது உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களில் மிக முக்கியமானது.

20. ஆடி மாதத்தில் வரும் இத்தினம் அம்பாளுக்கு விசேடமானது. குழம்பிவிட்டது.

27. 'ஒளி'யைக் குறிக்கும் சொல் இது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 42ன் விடைகள்:**

இடமிருந்து வலம்:
1. சந்தரணம் 7. தேவர் 11. ரவி 13. சகாப்தம் 19. பரந்தாமன் 26. சாரம் 31. (மீ)னம் 31. சுங்கை

மேலிருந்து கீழ்:
1. சர்ப்ப(தோசம்) 2. தேசாந்தரம் 3. வசந்தம் 5. மரணம் 6. வி(ட)ம் 16. காரகன் 24. தாரகை

**பரிசு பெறுவோர்:**

1-ம் பரிசு: செல்வி துஷிதா ராஜநாதன்
2, சாரதா வீதி, திருகோணமலை.

2-ம் பரிசு: V. சுப்பிரமணியம்
தபாற் கந்தோர், கரவெட்டி.

3-ம் பரிசு: திரு. வ. விசுவநாதர்
'கல்வளவு', கருகம்பனை
காங்கேசன்துறை.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.





## மில்க்வைற் நீலசோப்

சம்பூரண சலவைக்கு மில்க்வைற் நீலசோப்பை வாங்கி உபயோகியுங்கள். உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நீல சோப் புதிய விலை ரூபா. 2/- மட்டுமே.

20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி 1 மில்க்வைற் செய்தி அல்லது 1 காயத்திரி மந்திரத்துடன் கூடிய காயத்திரி படத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்,

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 42-00 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 180-00 |
| | இங்கிலாந்து | (விமானவழி) | வருட சந்தா | ,, 225-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280